

Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 25 இதழ் - 9 செப்டம்பர் 2012

தனிப் பிரதி ரூ. 9/-

... அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம்
என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே
உலகமுண்டானதுமுதற்கொண்டு,
தெளிவாய்க் காணப்படும்...
(ரோமர் 1 : 20)

# பதினைந்தாம் வேதாகம கருத்தரங்கம்

## Fifteenth Annual Bible Lectureship

**அக்டோபர் 23,24 - 2012 (செவ்வாய், புதன்)**

(அரசு விடுமுறை நாட்கள்)

**கருப்பொருள் - Theme**

**" விசுவாசத்தினாலே..."** (எபிரெயர் 11 ம் அதி.)

**" By Faith..."** (Hebrews 11 Chapter)

நேரம் : காலை 8:45 மணி - மாலை 5.00 மணி வரை

**இடம்**

**கிறிஸ்துவின் சபை வளாகம்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

* வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
* தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனி இடவசதி உண்டு.

## ஆசானின் போதனையில்....


1. ஆசிரியர் உரை ........ 1
2. பதினைந்தாம் வேதாகம கருத்தரங்கம் ........ 7
3. ஏன் இன்று ஒரே ஞானஸ்நானம் இருக்கிறது? ........ 8
4. பெண்கள் பகுதி ........ 13
5. வாலிபர் பகுதி ........ 15
6. சிறுவர் பகுதி ........ 19
7. நிழலும், நிஜமும் ........ 21
8. ஞானஸ்நானத்தின் அழகும், முக்கியத்துவமும் ........ 26
9. வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ........ 29


* ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
* முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
* இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
* M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசம் & தொலைபேசி எண்ணை கண்டிப்பாக எழுதவும்.
* அஞ்சல் வழியில் வேதாகம படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

- ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 25 SEPTEMBER 2012 Issue - 9


ஆசிரியர் உரை

# அப்போஸ்தலன் பவுலின் மார்ஸ் மேடைப் பிரசங்கம்

**ப**ரிசுத்த வேதாகமத்தில் புகழ்பெற்ற பிரசங்கங்கள் பல உண்டு. நன்மை செய்கிறவராய் இப்பூபாகத்தில் சுற்றித்திரிந்த நம் கிறிஸ்து ராஜாவைத் திரளான ஜனங்கள் பின்பற்றி வந்த பொழுது அவர் மலையின் மீது ஏறிச் செய்த "*மலைப்பிரசங்கம்*" (மத். 5-7), பாவம் அறியாத தேவ ஆட்டுக்குட்டியான இயேசு கிறிஸ்துவைக் கொஞ்சமும் தயங்காமல் கொடூரமான சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்த எருசலேம் பட்டணத்து வாசிகளுக்கு முன்பாக, பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு செய்த "*3,000 பேரை இரட்சித்த பிரசங்கம்*" (அப். 2ம் அதிகாரம்), கிறிஸ்துவுக்கு முதல் இரத்தசாட்சியாக மரித்த ஸ்தேவான் செய்த அற்புதங் களைக் கண்டு, பொறாமையினால் வெகுண்டெழுந்து, அவன் வாயை அடைக்க அவனோடு தர்க்கம் பண்ணி, அதிலும் தோற்றுப் போன ஒரு கிறிஸ்து விரோதக் கும்பல், அவனை ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாகக் கொண்டு சென்ற பொழுது ஸ்தேவான் செய்த "*மகா பிரசங்கம்*" (அப். 7) என்று இப்படி பல பிரசங் கங்களைச் சொல்ல முடியும். புகழ்மிக்க இந்த வரிசையிலே, அப்போஸ்தலனாகிய பவுல் அத்தேனே பட்டணத்து மார்ஸ் மேடையில் செய்த பிரசங்கத்தையும் நாம் பெருமையோடு சேர்க்க முடியும். அப்போஸ்தலர் 17-ம் அதிகாரம், 16-34 வசனங்களில் இதை நாம் காணலாம்.

பண்டைய கிரேக்கத்தில் மிக முக்கியமான பட்டணமாக இருந்தது தான் அத்தேனே பட்டணம். பாரம்பரியமிக்க பின்னணி இப்பட்டணத் திற்குச் சொந்தம். உலகில் உள்ள மிக அழகிய பட்டணங்களில் ஒன்றாக அந்நாட்களில் இப்பட்டணம் கருதப்பட்டது. அன்றைய உலகத்தின் கவனத்தை ஈர்த்த சர்வகலாசாலை ஒன்று அந்நாளில் இங்கு இருந்தது. ஆகவே, அறிவாளிகளுக்கு இப்பட்டணத்தில்

பஞ்சமில்லை. இன்றைக்கும், புகழ்மணம் வீசிக் கொண்டிருக்கும் சாக்ரடீஸ் போன்ற தத்துவ மேதைகள் இம்மண்ணுக்குச் சொந்தமானவர்களே. கிரேக்கருடைய ஞானம் வேதாகமத்தி லும் இடம் பிடித்துவிட்டது (1கொரி. 1:22). இப்பட்டணத்திலிருந்து 5 மைல் தொலைவில் துறைமுகம் ஒன்று இருந்ததால் வியாபாரத்திலும் சிறந்து விளங்கிற்று. இப்பட்டணத்தைச் சுற்றிலும் புகழ்மிக்க நான்கு மலைகள் இருந்தது இதன் இயற்கையழகிற்கு மேலும் மெருகேற்றியது. அதைக் காட்டிலும் புகழ்மிக்க 4 குன்றுகள் இப்பட்டணத்திற்குள் இருந்தது. அவைகளில் ஒன்று தான் "மார்ஸ் மேடை" ஆகும்.

இப்படிப்பட்ட பட்டணம், பவுலின் நாட்களில் முற்றிலுமாகத் தன்னை விக்கிரக வணக்கத்திற்கு ஒப்புக் கொடுத்திருந்தது. இப்பட்டணத்தில் இருந்த விக்கிரகங்களின் எண்ணிக்கையைப் பற்றி பேர்பெற்ற ஒருவர் இவ்விதமாகச் சொல்கிறார். "*அத்தேனே பட்டணத்தில் மனிதர்களைக் காட்டிலும் விக்கிரகங்களை எளிதில் பார்க்கலாம்*" என்று. அப்படியானால், உங்கள் கற்பனை வளத்திற்குச் சிறகு கட்டி, அப்பட்டணத்தின் நிலையை கொஞ்சம் ஊகித்துக் கொள்ளுங்கள்.

**ஆனால், ஓர் ஆறுதல் என்னவெனில், தெசலோனிக்கே, பெரோயா பட்டணத்தாரைப் போல இப்பட்டணத்தார் பவுலை ஊரை விட்டுத் துரத்தவில்லை.**

வித்தியாசமான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட பட்டணத்திற்குள் இருந்த 4 புகழ்மிக்க குன்றுகளில் ஒன்றுதான் "*மார்ஸ் மேடை*" என்று பார்த்தோம். இது ஒரு நியாய ஸ்தலம். இம்மேடை மீது ஏறக்கூடிய பாக்கியம், அந்நாளில், அத்தேனே பட்டணத்தில் வாழ்ந்த அனைவருக்கும் கொடுக்கப்படவில்லை. பட்டணத்தின் "*மேன்மை தங்கிய*" மக்கள் மட்டுமே அங்கு அடிக்கடி கூடுவார்கள். ஆம், பெரும் பதவிகளில் அமர்ந்து ஆட்சி செய்யும் அரசியல் வாதிகள், முதல் தரமான அரசு அதிகாரிகள், நீதிபதிகள், தத்துவமேதைகள், பெரும் பேச்சாளர்கள் போன்றவர்களுக்குத்தான் இம்மேடை தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டிருந்தது. சாதாரண ஜனங்களுக்கு மார்ஸ் மேடைப் பக்கம் வேலையே இல்லை. ஆனால், புறஜாதிகளுக்குச் சுவிசேஷம் சொல்ல வேண்டுமென்ற பெருநோக்கோடு தெரிந்தெடுக்கப்பட்ட பவுல், தத்துவ மேதைகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கனவான்கள், பிரமுகர்கள் அடங்கிய இடத்தில் சொற்பொழிவாற்றும்படியான சிலாக்கியத்தைப் பெற்றான்.

இவ்வளவு சிறப்புகள் பெற்ற பிரசங்கத்தில், பவுலடியார் அத்தேனரின் மூட நம்பிக்கைகள், உண்மையான தேவன், மனந்திரும்புதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், வரப்போகும் நியாயத்தீர்ப்பு ஆகியவைகள் பற்றியே பேசுகிறார். ஆயிரக்கணக்கில் பணம் செலவழித்து, நூற்றுக்கணக்கில் ஆட்களைத் திரட்டி, கதைவிடும் அநேகப் பிரசங்கிமார்கள் இவருடைய பிரசங்கத்தை ஊன்றிக் கவனித்தால் ஓர் உண்மையைக் கண்டறிய முடியும். தன்னுடைய

குலப்பெருமை பற்றியோ, தான் சுற்றி வந்த நாடுகளைப் பற்றியோ, தான் இரட்சிக்கப்பட்ட விதம் பற்றியோ, தன்னுடைய தியாகம் பற்றியோ, தான் செய்த அற்புதங்கள் பற்றியோ, தனக்கிருக்கும் சுவிசேஷ ஞானம் பற்றியோ, தேவன் பெயரால் பொய்யான திட்டங்கள் பற்றியோ, கோபுரம் கட்டுவது பற்றியோ, இன்னும் பல கட்டுமானப் பணிகள் பற்றியோ, அப்பணிகளுக்குத் தேவையான நிதி வசூல் பற்றியோ, கட்டுமான பணியினால் ஏற்பட்ட வங்கிக் கடன் பற்றியோ பேசாமல், ஜனங்களின் ஆத்துமத் தேவையை அறிந்து, நேரிடையாக விஷயத்திற்கு வருகிறார். அவரோடு ஒப்பிடும்போது இன்றுள்ள பிரசங்கிகள் கற்றுக் கொள்ள வேண்டியது ஏராளம் உண்டு.

சரி, மார்ஸ் மேடைப் பிரசங்கத்திலிருந்து நாம் இப்பொழுது சில பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும். அவைகளைக் கவனிப்போம்.

## I. பவுலின் ஊழிய வாஞ்சை, வைராக்கியம். (வசனம். 16,17)

பவுலடியார் அத்தேனே பட்டணத்திற்கு வருமுன் தெசலோனிக்கே, பெரோயா பட்டணங்களில், பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஊழியம் செய்தார். பெரோயா பட்டணத்திலிருந்து கலகக்கும் பலிடம் சிக்காமல், பவுலை உயிரோடே அனுப்பி விடுவது அப்பட்டணத்தாருக்குப் பெரும் பாடாகி விட்டது. சமுத்திர வழியாய் அவரை அனுப்பி விடுகிறார்கள் (வச.15). ஆனால், ஏற்பட்ட அமளி, துமளியால் தீமோத்தேயுவும், சீலாவும் அங்கேயே தங்க நேர்ந்து விட்டது.

தீமோத்தேயுவும், சீலாவும் தன்னிடத்தில் சீக்கிரமாய் வரவேண்டு மென்று கட்டளை கொடுத்து, அவர்கள் வருகைக்காக அத்தேனே பட்டணத்தில் காத்துக் கொண்டுள்ளார். அந்தக் காத்திருப்பு நாட்களை அத்தேனரின் ஆன்மீக நிலையை அறிந்து கொள்ள விரும்பிச் செலவிட்டு பட்டணத்தை வலம் வருகிறார். ஏன், இன்றைய நாட்களில், வரம் பெற்றவர்களும், அநேகப் பிரசங்கிகளும் ஊழியத்தினிமித்தம் செல்கிறேன் என்று ஊர் சுற்றித் திரிகிறார்களே

**அப்படி பவுலுக்கு ஊர் சுற்றத் தெரியவில்லையா? இயற்கை அழகும், புராதனச் சிறப்பும் மிகுந்த பட்டணத்தைச் சுற்றிப் பார்க்க அவருக்கு மட்டும் ஆசையிருந்திருக்காதா?**

நாடுகள் பல கடந்து நற்செய்தி அறிவித்தபடியால் அவருடைய சரீரம் ஓய்வு வேண்டு மென்று கேட்டிருக்காதா? ஆனால், இவை எல்லாவற்றைப் பார்க்கிலும் ஆத்தும பாரம் அவருக்கு மேலோங்கி இருந்துள்ளது.

ஆதாயத்திற்காக ஆத்துமபாரம் உள்ளதைப் போல் காட்டிக் கொண்ட பிரசங்கி அல்ல அவர். யாராவது நோட்டீசில் பெயர் போட்டு மேடை அமைத்து அழைக்கட்டும், பிறகு பிரசங்கிக்கலாம் என்று காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கவில்லை. மாறாக, விக்கிரக வணக்கத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் ஆத்துமாக்களை எப்படி விடுவிப்பது என்பது தான் அவருடைய பேச்சும், மூச்சுமாக இருந்தது.

ஆகவே தான், ஜெப ஆலயங்களிலும், சந்தைவெளிகளில் எதிர்பட்டவர் களோடும் தினந்தோறும் சம்பாஷனை செய்தார். பிரசங்கிகளே! கிறிஸ்தவர்களே! நம்முடைய நிலை என்ன? பவுலுக்கிருந்த ஊழிய வாஞ்சையும், வைராக்கியமும் நமக்கு உண்டா? சிந்திப்போம்.

## II. ஜனங்கள் எல்லா சமயத்திலும் சரியாகப் புரிந்து கொள்வதில்லை. (வசனம். 18)

ஆத்தும பாரத்தால் நிறைந்து பவுல் பேசின காரியங்களை அத்தேனரால் புரிந்து கொள்ள முடியவில்லை. பவுலுடைய காலந்தொட்டு இன்று வரை அநேகக் காரியங்களில் பெரும் முன்னேற்றம் கண்டிருக்கும் மானிடம், சத்தியத்திற்கான அணுகுமுறையில் மட்டும் ஓர் அடி கூட முன்னேறாமல் அப்படியே சிலைபோல் நின்று கொண்டிருக்கிறது. எப்பிக் கூரரும், ஸ்தோயிக்கருமான ஞானிகளால் கூட பவுல் பேசியதை விளங்கிக் கொள்ள முடியவில்லை. வாயாடியாகவும், அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகவும், நூதனமான காரியங்களைப் பேசுகிற வனாகவும் பவுல் அவர்கள் பார்வைக்குக் காணப்பட்டான்.

இன்றும் கூட நிலைமையில் மாற்றம் இல்லை. சத்தியத்தை சத்திய மாகப் போதிக்கப் புறப்பட்டால் போதுமான வரவேற்போ, மரியாதையோ இல்லை. வீண் பகட்டுகளையும், வேடிக்கைகளையும் ஜனங்கள் எதிர்பார்க்கின்றனர். கிறிஸ்துவில் நம்பிக்கையுள்ள கல்வியாளர்களாகிலும், சத்தான உபதேசத்தை ஏற்றுக் கொள்வார்களென்று அணுகினால், வேதனையும், விரக்தியுமே மிஞ்சும். கல்வியறிவிற்கும், ஜனங்களுடைய பக்திப் பேச்சுக்கும் சம்பந்தமே இருப்பதில்லை.

ஆனால், அதற்காக நாம் சோர்ந்து போக வேண்டிய அவசிய மில்லை. பவுல் மனம் தளர்ந்து விடவில்லை. உறுதி குன்றி நிலை குலைந்து போய் விட வில்லை. வாஞ்சையோடும், வைராக்கியத்தோடும் ஊழியத்தைத் தொடர்ந்தார். வெற்றியும் பெற்றார்.

**நாமும் தூய சத்தியத்தையம், கிறிஸ்து தம்முடைய இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த ஒரே சபை பற்றியும், இன்னும் வேதம் வெளிச்சம் போட்டுக் காட்டும் ஏனைய உபதேசங்கள் குறித்தும் தொடர்ந்து போதிப்போம், வெற்றி பெறுவோம்.**

## III. அறிந்ததிலிருந்து, அறியாததைச் சொல்கிறார். (வசனம். 22-23)

எதிர்மறை உபதேசத்தைத் தவிர்த்த ஓர் அணுகுமுறையை இப்பிரசங் கத்தில் நாம் காணலாம். அவர்களுடைய மத நம்பிக்கையை, தேவ பக்தியை மெச்சுகிறார். ஒருவேளை, அது மூட நம்பிக்கையாகக் கூட இருந்திருக்கலாம். இருப்பினும், அவர்களுக்கு என்ன இருந்ததோ, அதையே முதலீடாக வைத்து காரியத்தைச் சாதிக்க முயற்சி செய்கிறார். நீங்கள் இதுகாறும் ஏறெடுத்த ஆராதனைகள் தவறு என்று நேரிடையாகக் குற்றம் சாட்டி, கூண்டில் ஏற்றி, நீங்கள் பாவிகள் என்று, அவசர கோலத்தில் தீர்ப்பளிக்காமல், நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே உங்களுக்கு அறிவிக்கிறேன் என்று பேசி மெல்லத்

தன்னருகில் இழுத்து வருகிறார். அவர்களுக்குள்ளாக இருந்த பக்தியை, மெய்யான தேவ வணக்கத்திற்கு நேராக மாற்றப் பாடுபடுகிறார்.

புதிய ஏற்பாட்டில் கர்த்தரை ஏற்றுக்கொண்ட பெரும்பாலோர் மத நம்பிக்கை யுள்ளவர்களாகவே இருந்தனர். ஆனால், தவறான நம்பிக்கையில் சிக்கி யிருந்தார்கள். அப். 2-ம் அதிகாரத்தில் நாம் பார்க்கும் யூதர்கள் மத நம்பிக்கை யுடையவர்கள் தான். அப். 8-ல் சமாரியர்களும், எத்தியோப்பிய மந்திரியும் மத நம்பிக்கை கொண்டவர்களே. அப். 10-ம் அதிகாரத்தில் நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நெலியுவைப் பற்றி நாம் சொல்லவே வேண்டாம். தேவையானால் இப்பட்டியலை நீட்டிக் கொண்டே போக முடியும். இவர்களின் மத நம்பிக்கைகள் சரியான அடிப்படையில் இல்லாதிருந்ததால், ஜீவ மார்க்கத்தை அவர்களுக்குக் காட்ட வேண்டியிருந்தது. அவர்களும் மெய்யான உபதேசத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

ஆனால், இன்று பெரும்பாலோருடைய வாதம், சத்தியமே தெரியாத வர்களுக்குத் தான் சத்தியம் சொல்லப்பட வேண்டும் என்பது. இதில் உள்ள பேருண்மையை நான் மறுக்கவில்லை. ஆனால், எங்களுக்குச் சத்தியம் தெரியும் என்று நினைக்கும் அநேகர், சத்தியமே தெரியாமல் இருக்கிறார்கள் என்பது தானே யதார்த்த நிலைமை! இப்படிப்பட்டவர்களுக்குச் சத்தியம் சொல்வதே குற்றமா? அரைகுறை சத்தியம் ஒருவனுடைய ஆன்மீக வாழ்வுக்கு வழி காட்ட முடியாது. பாதி உபதேசம் ஒருவனை பரலோகத் திற்கு அழைத்துச் செல்லாது. முழுமையான சத்தியத்தை அனைவருக்கும் சொல்லுவோம். பொய்யான நம்பிக்கையில், தவறான உபதேசத்தில் உள்ளவர்களுக்கும் சரியான பாதை காட்டுவோம். சத்தியம் அவர்களை விடுதலையாக்கும். "*சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்*" (யோவான் 8:32).

## VI. பிரசங்கத்தின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறார் (வசனம். 30)

" அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார் " என எச்சரிக்கிறார். இந்நாள் வரை நீங்கள் செய்தது சரி, இனி சாக்குப் போக்குச் சொல்ல இடமில்லை. முடி வெடுக்க வேண்டிய தருணத்திற்கு வந்து விட்டீர்கள் என்று அவர்களை நெருக்குகிறார். மணிக்கணக்காக, அழகாகப் பிரசங்கித்து, இறுதியில் கேட்கின்ற மக்கள் என்ன செய்ய வேண்டுமென்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லாமலே அநேகப் பிரசங்கிகள் நழுவி விடுவர். ஒரு வேளை சொல்வதை அநேகர் விரும்பாவிட்டால் அடுத்த கூட்டத்திற்கு வரமாட்டார்களோ என்று. இவரோ, மனந்திரும்புங்கள் என்று எச்சரிக்கிறார்.

மனந்திரும்புங்கள் என்று சொல்வதற்கு முன்னால், "*கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார், அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமான வரல்லவே!!*". என்றும் சொல்கிறார் (வசனம் 27) மெய்யான தேவனைக் கண்டுபிடிப்பது கொஞ்சம் சிரமம் தான். ஆனால், அது முடியாத காரியம் அல்ல என்பது தான் அதன் பொருள்,

**அதைப்போலவே, மெய்யான சபையைக் கண்டுபிடிப்பதும், தெருவுக்கு ஒன்றாக உள்ள இத்தனை சபைகளில் உண்மை எது என்று கண்டுபிடிப்பதும் இந்நாட்களில் கொஞ்சம் சிரமமே.**

ஆனால், முடியாது என்று ஒருவராலும் சொல்ல முடியாது. ஆம், முடியாது என்று சொல்வோமானால் நாம் வேதவாக்கியங்களையும், தேவனையும் பொய்யாக்கு கிறவர்களாய் இருப்போம்.

மனந்திரும்புங்கள் என்று சொல்கிறாரே, அது எதற்காக? " மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார் என்பதால் தான். (அப். 17:31) நியாயத் தீர்ப்பைப் பற்றிய அக்கறையும், பயமும் இல்லாத சந்ததியில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். கிறிஸ்துவின் வருகையும், நியாயத்தீர்ப்பும் அதிநிச்சயம். அதை யாராலும் தடுத்த நிறுத்த முடியாது. ஒவ்வொரு நாளைக் கடக்கும் பொழுதும் நியாயத்தீர்ப்பை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டுள்ளோம். வேதாகமத்தின் கடைசிப் புத்தகமாகிய, வெளிப் படுத்தின விசேஷத்தின் இறுதி அதிகாரத்தில் மட்டும், இதோ சீக்கிரமாய் வருகிறேன் என்று பொய்யுரையாத, வாக்குமாறாத தேவன் மும்முறை வாக்குக்கொடுத்திருக்கிறார் " (வ. 7,12,20).

ஆனால், அருமையான வாசகரே! எல்லாப் பிரசங்கத்தைப் போல, இந்த மார்ஸ் மேடைப் பிரசங்கத்தையும் அற்பமாக எண்ணப் போகிறோமா? வேண்டாம், நாட்களை வீணாகக் கழித்தது போதும். மெய்யான தேவனைக் கண்டு கொள்வோம், மெய்யான சபையை அடையாளம் காண்போம், மனந் திரும்புவோம், இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வோம், நியாயத்தீர்ப்பிற்கு ஆயத்த மாவோம், மறுமையைச் சுதந்தரிப்போம்! ஆமென்.

## நீங்கள் எப்படிச் சிந்திக்கிறீர்கள்?

**கடைசியாக சகோதரரே,**
**உண்மையுள்ளவைகளெவைகளோ,**
**ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ,**
**நீதியுள்ளவைகளெவைகளோ,**
**கற்புள்ளவைகளெவைகளோ,**
**அன்புள்ளவைகளெவைகளோ,**
**புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ**
**அவைகளையே**
**சிந்தித்துக் கொண்டிருங்கள்.**

**(பிலிப்பியர் 4:8)**

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்!! பங்கு பெறுங்கள் !!!

காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்,
தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டமும்
இணைந்து நடத்தும்

# பதினைந்தாம் வேதாகம கருத்தரங்கம்

## FIFTEENTH ANNUAL BIBLE LECTURESHIP

**நாள்**

**அக்டோபர் 23,24 - 2012 (செவ்வாய், புதன்)**

**(அரசு விடுமுறை நாட்கள்)**

**கருப்பொருள் – THEME**

**" விசுவாசத்தினாலே..."** (எபிரெயர் 11 ம் அதி.)

**" By Faith..."** (Hebrews 11 Chapter)

**நேரம் : காலை 8:45 மணி - மாலை 5.00 மணி வரை**

**இடம்**

**கிறிஸ்துவின் சபை வளாகம்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.


* வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
* தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனி இடவசதி உண்டு.

**தொடர்பு முகவரி**

**கிறிஸ்துவின் சபை**

288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385, 98652 - 90572



# ஏன் இன்று ஒரே ஞானஸ்நானம் இருக்கிறது?

**J.C. சோட்**

நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ, இல்லையோ எனக்குத்தெரியாது, ஆனால், கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் மத்தியில் பல ஞானஸ்நானங்கள் உண்டு என்று போதிக்கிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். முழுக்கு ஞானஸ்நானம் தெளிப்பு ஞானஸ்நானம், ஒருவருடைய தலையின்மேல் தண்ணீரை ஊற்றுகிற ஞானஸ்நானம், ஆவியின் ஞானஸ்நானம் என்று பல ஞானஸ்நானங்கள் இதில் உள்ளடக்கம். இப்படி போதிப்பவர்களின் கூற்றுப்படி, ஞானஸ்நானத்திற்கு பல்வேறுபட்ட நோக்கங்கள் இருக்கின்றன. பெரும்பாலானவர்கள் ஞானஸ்நானம் ஒருவருடைய இரட்சிப்பிற்கான அடையாளம் என்று சொல்கிறார்கள். மற்றவர்கள் ஞானஸ்நானம் பாவ மன்னிப்புக்காக இருந்து ஒருவரை கிறிஸ்துவுக்குள், சபைக்குள் கொண்டு வருகிறது என்று போதிக்கிறார்கள்.

ஆனால், வேதாகமம் ஒரே ஒரு ஞானஸ்நானம் தான் உண்டு என்று போதிக்கிறது. பவுல் இப்படிச் சொல்கிறார், "*உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே ஒரு நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்* " (எபே. 4:4-6). தேவ ஆவியினால் ஏவப்பட்ட தேவ மனுஷன் ஒரே தேவன், ஒரே கர்த்தர் அல்லது கிறிஸ்து, ஒரே ஆவி அல்லது பரிசுத்த ஆவி, ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே சரீரம், ஒரே நம்பிக்கை நமக்கு உண்டு என்று வெளிப்படுத்தியுள்ளார். இவைகள் ஒரே தேவன், ஒரே கிறிஸ்து என்று பொருள் தருமானால், ஞானஸ்நானம் என்பதும் ஒன்றே ஒன்று தான்.

**ஒரே ஞானஸ்நானம் என்பது எந்த ஞானஸ்நானம்? மனிதர்கள் இன்று பேசுகிற ஞானஸ்நானம் அல்லாமல் வேத வாக்கியங்களில் நாம் பல்வேறுபட்ட ஞானஸ்நானங்களை வாசிக்கிறோம்.**

அப்படியானால், லூக்கா 7:29-ல் ஜனங்கள் யோவானின் ஞானஸ்நானம் பெற்றதை நாம் வாசிக்கி றோம். தன்னைச் சோதிக்க முயற்சி செய்த மக்களைப் பார்த்து இயேசு இப்படிக் கேட்டார், "*யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற் றோ, மனுஷரால் உண்டாயிற்றோ எனக்கு உத்தரவு சொல்லுங்கள் என்றார்* " (மாற்கு 11:30).

கிறிஸ்து, யோவானால் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார் (மத். 3:13-17). எல்லா நீதியையும் நிறைவேற்றக் கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றிருந்தாலும், பொதுவாக ஜனங்கள் வரவிருந்த கர்த்தருடைய ராஜ்யமாகிய சபைக்கு ஆயத்தமாக ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆகவே, அது

மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானம் என்றழைக்கப்பட்டது (லூக்கா 3:3). எபேசுவில் பவுல் யோவானின் ஞானஸ்நானம் பெற்ற சிலரைக் கண்டார். ஆனால், அவர்கள் பரிசுத்த ஆவி பற்றி கேள்விப்படவேயில்லை என்று அறிந்தவுடன், யோவானின் ஞானஸ்நானத்தின் நோக்கம் பற்றி அவர்களுக்குப் போதிக்கும் போது இப்படியாகச் சொன்னார். "*யோவான் தனக்குப் பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்*" (அப். 19:4,5). யோவானின் ஞானஸ்நானம் காலவரம்பு இல்லாமல் எப்பொழுதும் இருக்க வேண்டுமென்ற நோக்கில் திட்டமிடப்பட்டதல்ல. அதற்கான நோக்கம் நிறைவேறியவுடன் அது முடிந்து போய்விட்டது.

மத்தேயு 3:11,12 வசனங்களில், யோவான் ஸ்நானகன், இயேசு கொடுக்கப்போகிற இரண்டு ஞானஸ்நானங்கள் பற்றிப் பேசுகிறார்; "*மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்*" *என்றான்.* இங்கே யோவான், ஒரு அறுவடை செய்பவரை படம்பிடித்துக் காட்டி, கிறிஸ்து ஜனங்களை எப்படி நடத்துவார் என்று விளக்குகிறார். அந்த நாட்களில் வாழ்ந்த ஜனங்கள் கோதுமை அறுவடையைப் பற்றி நன்றாக அறிந்திருந்தார்கள். கோதுமை நன்றாக போரடிக்கப்பட்டு பின்பு, காற்று அல்லது தூற்றுக்கூடையின் உதவியினால் கோதுமையும், பதரும் தனித்தனியே பிரிக்கப்படும். கோதுமை சேகரிக்கப்பட்டு உணவுக்காக பாதுகாக்கப்படும்; ஆனால், பதர் அல்லது பயனற்றது சுட்டெரிக்கப்படும். அதேவிதமாக யோவான் சொல்லும்போது, கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் ஞர்னஸ்நானம் கொடுப்பார் என்று சொன்னார். பின்பு, கிறிஸ்து தமது அப்போஸ்தலர்களிடத்தில், தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரை அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்தார் (யோவான் 15:26; யோவான் 16:7,13). அப். 1:8-ல், மறுபடியும் இயேசு பரிசுத்த ஆவியானவரை அவர்களிடத்தில் அனுப்புவதாக வாக்குத்தத்தம் செய்தார். லூக்கா 24:49-யும் வாசியுங்கள். அப்போஸ்தலருடையநடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் அப்போஸ்தலர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கி, கிறிஸ்து போதித்தவைகளையெல்லாம் அவர்களுக்கு நினைவூட்டினார். அத்தோடு அப்போஸ்தலர்கள் அந்நிய பாஷைகளில் பேசவும், அற்புத அடையாளங்கள் செய்யவும் வல்லமை கொடுத்தார். அப்போஸ்தலர்கள் மூலமாக எல்லோருமே ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆனால், யோவான் சொல்லும்போது கிறிஸ்து அக்கினியாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று சொல்கிறார். இது எதைக் குறிக்கிறது? சேகரிக்கப்பட்ட கோதுமை நீதிமான்களைக் குறிக்குமானால், சுட்டெரிக்கப்பட்ட பதர்

ஆவியால் ஞானஸ்நானப்படுத்துவார், ஆனால், துன்மார்க்கரை அக்கினியால் ஞானஸ்நானப்படுத்துவார்.

**ஞானஸ்நானம் என்பது மூழ்குதல் என நாம் புரிந்து கொள்ளும் போது, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினாலே மூழ்கடிக்கப்பட்டார்கள் அல்லது மூடப்பட்டார்கள். கிறிஸ்து அக்கினியால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்பது, துன்மார்க்கர் அக்கினியிலே மூழ்கடிக்கப்படுவார்கள் என்பதைக் குறிக்கிறது.**

துன்மார்க்கர் அப்படியாக நடத்தப்படுவார்கள் என்பது பற்றி வேத வாக்கியங்களில் நாம் எங்கே வாசிக்கிறோம்? முதலாவது, கிறிஸ்து ஒரு நாளில் இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பார். அப்பொழுது துன்மார்க்கர் நரகத்தில் தள்ளப்படுவார்கள் (II பேதுரு *2:4)* அவர்கள் நித்திய ஆக்கினையை அடையும்படி போவார்கள் (மத். *25:46*) என்று வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. மறுபடியும், நரகம் அக்கினிக்கடலாக விவரிக்கப்பட்டிருக்கிறது (II பேதுரு *3:7;* யூதா *7;* வெளி. *20; 10,14; 21:8*). அதன் பொருள், துன்மார்க்கர், தேவபக்தியற்றவர்கள், இழந்து போனவர்கள் அக்கினிக்கடலில் மூழ்கடிக்கப்படுவார்கள் அல்லது ஞானஸ்நானப்படுத்தப்படுவார்கள். நிச்சயமாகவே, யாரும் ஒரு சரியான மனநிலையோடு அக்கினி ஞானஸ்நானத்தைப் பெற விரும்பமாட்டார்கள்.

I கொரிந்தியர் *10:1-4* வசனங்களில் பவுல் இப்படி எழுதுகிறார் "இப்படியிருக்க, சகோதரரே நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக்கிறனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள்; எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள், எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள்; எப்படியெனில் அவர்களோடேகூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள்; அந்தக்கன்மலை கிறிஸ்துவே ". அந்நாட்களில் இது ஞானஸ்நானமாகக் கருதப்படவேண்டிய அவசியமில்லாவிட்டாலும், பவுல் இஸ்ரவேல் ஜனங்கள் சமுத்திரத்தின் வழியாய் இருபுறமும் தண்ணீரால் சூழப்பட்ட நிலையில் மேகத்துக்குக் கீழாயிருந்ததை எண்ணிப் பார்த்து பவுல் இதை ஞானஸ்நானம் என்று விவரிக்கிறார். வேறுவிதமாகச் சொன்னால், அவர்கள் மேகத்துக்குள்ளாகவும், கடலுக்குள்ளாகவும் மூழ்கடிக்கப்பட்டிருந்தார்கள் அல்லது அடக்கம் பண்ணப்பட்டிருந்தார்கள்.

செபெதேயுவின் குமாரருடைய தாய் இயேசுவின் ராஜ்ஜியத்தில் தன்னுடைய இரண்டு குமாரர்கள் ஒருவன் இயேசுவின் வலது பாரிசத்திலும், மற்றவன் இடது பாரிசத்திலும் உட்கார வேண்டினபோது, " இயேசு அவருக்கு பிரதியுத்திரமாக; நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னதென்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். *அதற்கு அவர்கள் கூடும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி; என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள் நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும் என் வலது பாரிசத்திலும், என் இடது பாரிசத்திலும், உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கேயல்லாமல் மற்றொரு*

*வருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார்* ". (மத். 20:22,23). மறுபடியும் கிறிஸ்து சொல்லும் போது, " *ஆகிலும் நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானமுண்டு என்று சொன்னார்* " (லூக்கா 12:50). இங்கே இயேசு பேசுகிற ஞானஸ்நானம் சிலுவைப் பாடுகள் பற்றியது. அதாவது, பாடுகளில் மூழ்குகின்ற ஒரு அனுபவத்தைக் குறிக்கிறது. இப்படிப்பட்ட பாடுகளை இயேசு ஒரே ஒரு முறை கடந்து போனார்.

கடைசியாக, வசனங்கள் விசுவாசிகளுடைய ஞானஸ்நானம் பற்றிப் பேசுகிறது. இந்த ஞானஸ்நானம் தண்ணீர் ஞானஸ்நானம் (அப். 8:26 39) இது ஓர் அடக்கம். (கொலோ. 2:12; ரோமர் 6:3,4) இது பாவமன்னிப்புக்கான ஞானஸ்நானம் (அப். 2:38), இது பாவங்கள் கழுவப்படுவதற்கான ஞானஸ் நானம் (அப். 22:16). இது இரட்சிக்கப்படுவதற்கான ஞானஸ்நானம் (1பேதுரு 3:21), இது ஒருவரை கிறிஸ்துவுக்குள் வரச் செய்கிறது (கலாத். 3:26,27). இது ஒருவரை சபைக்குள் வரச் செய்கிறது (1கொரி. 12:13). இது கிறிஸ்துவின் நாமத்தினாலே பெறப்படவேண்டும் (அப். 2:38). அதாவது, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே பெறப்படவேண்டும் (மத். 28:19,20). கிறிஸ்து இப்படிச் சொன்னார் " *பின்பு அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்* " (மாற்கு 10:15,16).

எபேசியர் 4:4-6 வசனங்களுக்கு நாம் திரும்பும் போது, அங்கே பவுல் ஒரே ஒரு ஞானஸ்நானம் என்று சொன்னதை நினைவில் கொள்ளுங்கள். இந்த வார்த்தைகளை அவர் சொன்ன போது, தோராயமாக கி.பி. 64 ஆம் வருடம். ஆனால், வேத வாக்கியங்களில் நாம் வாசிக்கின்ற ஞானஸ்நானங்களில் எந்த ஞானஸ்நானம் ஒரே ஞானஸ்நானம்? அதைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு நல்ல வழி உண்டு. அதாவது, எப்பொழுதெல்லாம் ஒரு ஞானஸ்நானம் விசுவாசியின் ஞானஸ்நானமாக அல்லது தண்ணீர் ஞானஸ்நானமாக இல்லையோ அப்பொழுதெல்லாம் அது வேறு என்ன ஞானஸ்நானம் என்று சொல்லப்பட்டிருக்கும்? இதையே வேறு விதமாகச் சொன்னால், வேத வாக்கியங்கள் அப்படிப்பட்டவைகளைப்

**பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், அக்கினி ஞானஸ்நானம், யோவானின் ஞானஸ்நானம், பாடுகளின் ஞானஸ் நானம், மேகத்தின் ஞானஸ்நானம், சமுத்திரத்தின் ஞானஸ்நானம்**

எனப் பேசுகிறது. எனவே எபேசியர் 4:4-6 வசனங்களில், ஒரே ஞானஸ்நானம் என நாம் வாசிக்கும்போது, இது விசுவாசிகளின் ஞானஸ்நானத்தைத் தான் குறிக்கிறது என்று நாம் முடிவுக்கு வந்து விடலாம்.

நம்முடைய நாட்களில் வாழும் மக்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் நமக்கும் இருக்கிறது என்று பேசக்கேட்கிறோம், ஆனால், இந்த ஞானஸ்நானம் கிறிஸ்துவால் அப்போஸ்தலர்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. அதை அவர்களுக்குக் கொடுத்ததும் கிறிஸ்துவே. எனவே, இந்த ஞானஸ்நானம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகக் கொடுக்கப் பட்டது; இன்று யாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறுவதில்லை.

தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றி போதிக்கிற வேறு சிலர் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு விசுவாசி இரட்சிக்கப்பட்டு, தான் இரட்சிக்கப்பட்டதைக் காட்டுவதற்கு ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி அவர்கள் சொல்வது சரியானால், ஒருவர் கிறிஸ்துவுக்கு வெளியே, அவருடைய சபைக்கு வெளியே இரட்சிக்கப்படுகிறார் என்று பொருள் படும். ஆனால், வேத வசனம் ஒருவர் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்க, அவருடைய சபைக்குள் பிரவேசிக்க ஞானஸ்நானம் பெற வேண்டும் என்றே சொல்கிறது (கலா. *3:26, 27,* I கொரி. *12:13*). இந்தக் காரியத்தில் இந்த மக்கள் தவறு செய்கிறார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். கர்த்தருக்குக் கீழ்ப் படியும் வரை ஒருவர் இரட்சிக்கப்பட முடியாது. அந்த இரட்சிப்பின் ஒரு பகுதி தான் முழுக்கு ஞானஸ்நானம்.

**தெளிப்பு மற்றும் ஊற்றுதல் ஞானஸ்நானங்கள் தேவனுடைய வார்த்தையின் போதனையிலிருந்து ஒருவன் எவ்வளவு தூரம் விலகிச் செல்ல முடியும் என்பதற்கு அடையாளமாக உள்ளது.**

தலையில் தண்ணீரை ஊற்றுவது, தெளிப்பது போன்றவைகளை ஒரு போதும் ஞானஸ்நானம் என்று சொல்ல முடியாது. ஞானஸ்நானம் என்பது ஓர் அடக்கம், ஒரு மூழ்குதல். தெளித்தல் என்பது வெறுமனே தெளித்தல் தான். அதுபோல, ஊற்றுதல் என்பதும் வெறுமனே ஊற்றுதல் தான். அவைகள் ஞானஸ்நானம் ஆகாது. இப்படிப்பட்ட பழக்கங்கள் மனிதனுடைய கண்டுபிடிப்புகள்.

இங்கே கேள்வி இது தான்; வேதாகமத்தின் ஒரே ஞானஸ்நானத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டு விட்டீர்களா? ஏற்றுக் கொள்ளவில்லையென்றால் நீங்கள் அப்படிச் செய்ய வேண்டும். புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை நீங்கள் முழுமையாக வாசித்தால் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த எல்லோருமே கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேட்டார்கள், தேவனையும், கிறிஸ்துவையும் விசுவாசித்தார்கள், பாவங்களிலிருந்து மனந் திரும்பினார்கள், கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்தார்கள், தங்கள் பாவமன்னிப்புக்காக முழ்கி ஞானஸ்நானம் பெற்றார்கள். அதன் பின்பு கர்த்தர் அவர்களை இரட்சித்து தம்முடைய சபையிலே சேர்த்துக் கொண்டார் (அப். *2:38,41,47*). அவர்கள் செய்ததை நீங்கள் செய்தால், கர்த்தர் உங்களையும் இரட்சித்து தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்வார்.

நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், அல்லது ஞானஸ்நானம் பெற்றிருப்பதாக நினைத்தால், ஒருவேளை அது தெளிப்பு அல்லது ஊற்றுதல் ஞானஸ்நானமாக இருந்து, அது சரியான நோக்கத்திற்காக பெறப் படாமலிருந்தால், வேத வசனங்களின்படி நீங்கள் ஞானஸ்நானம் பெற வேண்டும். ஆனால், இது இரண்டாவது ஞானஸ்நானமாகி விடும் என்று நீங்கள் சொல்லலாம். அப்படியில்லை, ஒரே ஒரு ஞானஸ்நானம் தான், நீங்கள் கர்த்தருடைய உபதேசத்தின்படி ஞானஸ்நானம் பெறாதிருந்தால் நீங்கள் ஒருபோதும் ஞானஸ்நானம் பெறவில்லை. வேத வாக்கியங்களின் படி நீங்கள் ஞானஸ்நானம் பெற்றால் தான், வேதாகமத்தின்படியான ஒரே ஞானஸ்நானத்தைப் பெற்று விட்டதாக உங்களால் சொல்ல முடியும்.

பெண்கள் பகுதி

# நானும் என் வீட்டாருமோவென்றால்..

**ரேச்சல் இராஜநாயகம்**

இஸ்ரவேல் மக்கள் கர்த்தரை மறந்து தன் மனம் போன போக்கில் போய்க் கொண்டிருந்த சூழ்நிலையில் யோசுவா தன்னுடைய குடும்பத்தாரின் விசுவாச உறுதிக்கு உத்திரவாதம் அளித்து " நானும் என் வீட்டாருமோ வென்றால் கர்த்தரையே சேவிப்போம்" என்றான். (யோசுவா 24:15) நோவா கூட உலகமெல்லாம் தன் செயல்முறை களை இகழ்ந்தும், பழித்தும் கூறியும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் தன் குடும்பத்தாரை விசுவாசத்திலிருந்து வழுவிப் போகாவண்ணம் காத்துக் கொண்டான் (1 பேதுரு 3:20, 2 பேதுரு 2:5) ஆனால், தற்காலத்தில் குடும்பமாக ஆராதனையில் கலந்து கொள்ளாமல் ஆண்கள் மட்டும் வந்து போவது கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப் படும் தவறான பழக்கவழக்கங்களில் ஒன்றாக இருக்கிறது. அதுவும் ஆராதனைக் கூடங்கள் சற்று தூரமாக இருந்து விட்டால் அதையே காரணமாக்கி விடுவர். போதிய பஸ் வசதி இல்லை குழந்தைகளை இழுத்துக் கொண்டு போக்குவரத்து நெரிசலில் அவை களை ஏற்றி இறக்கிக் கொண்டு வந்து சேர்வ தற்குள் பெரும்பாடாய்ப் போய் விடுகிறது. அப்படித்தான் அவர்களைக் கொண்டு வந்து சேர்த்தாலும் என்ன, அவர் களுக்குப் பிரசங்கங்களுக்கும், இதர சபை நடவடிக்கைகளும் விளங்கவா போகிறது? ஆகவேதான் அவர் மட்டும் வந்து விட்டு வரட்டும், பிள்ளைகள் பெரிதான பிறகு நாங்கள் வருகிறோம் என்று தாய்மார்களும் தப்பித்துக் கொள்கின்றனர்.

இந்த மாதிரி பழக்கத்தில் ஏற்படும் விளைவுகள் என்ன வென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் (1) ஆண்கள் மட்டும் போய் ஆராதித்து வருவதினால் முழுக் குடும்பமும் கிறிஸ்துவுக்குள் வளர முடியுமா? (2) பிள்ளைகளுடைய வேத அறிவு வளர்ச்சியடையுமா? (3) அவர் கள் சபை நடவடிக்கைகளில் பங்கு கொள்ளாமல் அவர்களுடைய விசு வாசம் உறுதியாக இருக்குமா? (4) அங்கே ஆராதனைக்காகக் கூடி வரும் மற்ற சகோதர சகோதரிகளை மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் பார்க்கா மலே இருந்தால் அவர்கள் மீது இவர் களுக்கு அன்பு சுரக்குமா? (5) ஒற்றுமை உணர்வு உருவாகுமா? (6) சிறு பிள்ளைகளுக்கான ஞாயிறு பள்ளி ஒழுங்காக நடந்து அவர்கள் வேத அறிவைப் பெற்றுக் கொள்ள முடியுமா? (7) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? சிறுபிள்ளைகளாக இருக்கும் பொழுது அவர்களுக்கு நற் பழக்கங்களையும், கர்த்தருக்குப் பயப் படும் பயத்தையும் கற்றுத்தராமல் போனால் வளர்ந்து, ஆள் ஆகும் போது அவர்களை நல்வழிப்படுத்துவது சிரமம் அல்லவா?

> சகோதரிகளே! கணவன் மாத்திரம் ஆராதனையில் கலந்து கொண்டு நாமும், குழந்தைகளும் வீட்டிலேயே இருந்து விட்டால் நாம் விசுவாசத்தை விட்டு வழுவி விழுந்து போகமாட்டோமா?

இந்தத் தலைமுறைக் கிறிஸ்த வர்கள் விசுவாசத்தில் உறுதியாக இருந் தால் அல்லவா, நமக்குப்பின் வருகிற பிற்காலச் சந்ததிகள் விசுவாசத்தில் வளர்வதற்கு வாய்ப்பாக இருக்கும்?

நாம் நம்முடைய குழந்தைகள் விசுவாசத்தில் வளர்வதற்கேற்ற சூழலை அமைத்துத் தராவிட்டால் அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பலவீனமாகி விடுவார்களே! இந்த அபாயங்களை நாம் உணர்ந்து அவர்கள் விசுவாச ஜீவியத்தில் வளர் வதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

பெண்களுக்கும் ஆத்துமா உண்டு. ஆகவே அவர்களும் தேவ னைத் தொழுவது அவசியம். ஆசீர் வாதத்தைப் பார்சலில் அனுப்ப முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய வாயிலி ருந்து வரும் வார்த்தைகளைக் கேட்டு அவர்கள் வழி நடத்தப்படவும், உற்சாகப்படுத்தப்படவும் வேண்டும். அவர்கள் சபையில் உள்ள மற்ற சகோதரிகளை நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள முடியும். சபையால் நடத்தப்படும் பல்வேறு செயல் திட்டங்களில் தன்னை யும் இணைத்துக் கொண்டு ஆவிக் குரிய வளர்ச்சி பெற்று தேவனுக்குப் பிரியமாய் நடக்க வேண்டும்.

ஒருவேளை பெரியவர்களைப் போல குழந்தைகள், சொல்லப் படுகிற காரியங்களைத் தெளிவாக புரிந்து கொள்ளாமல் போகலாம். அதற்காகத் தானே ஞாயிறு பள்ளி. அதில் அவர் களுடைய வயதுக்கும், மனப்பக்கு வத்துக்கும் ஏற்ற முறையில் தேவனு டைய வார்த்தைகளைக் கற்பிக்க லாமே! அதனால் தான் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை ஒவ்வொரு கூட்டத்திற்கும் அழைத்துக் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்து கிறோம். அப்படிச் செய்தால் அவர்கள் நன்கு பயிற்சி பெற்று கர்த்தருடைய வசன அறிவில் வளர்ச்சியடை வார்கள். பெண்களும், குழந்தை களும் பொதுவாக ஆராதனைக் கூட்டங்களுக்கு ஒழுங்காக வருவ தோடு மட்டுமல்லாது, வீட்டிலேயும் பிள்ளைகளுக்குக் காலை, மாலை ஜெபங்கள், வேத பாடப் பயிற்சி ஆகிய வைகளை ஒழுங்காகக் கற்றுத் தர வேண்டும்.

**ஏனெனில், வாரத்தில் ஒருநாள் இரண்டொரு மணி நேரம் ஆராதனையில் நாம் கற்றுக் கொள்கிற கொஞ்ச காரியம் வாரம் ஏழு நாட்கள் முழுவதுக்கும் போதாது.**

எனவே, வீட்டிலும் நாள்தோறும் சிறிது நேரத்தை ஒதுக்கி குழந்தை களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்களுடைய விசுவாச ஜீவன் பலப்படும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய சிறார்களுக்கு நித்திய ஜீவனை அடைவதற்கான காரியங் களில் பயிற்சி கொடுக்கத் தவறி விட்டு, சொற்பக் காலத்தில் அழிந்து போகிற சரீரப்பிரகாரமான நன்மைகளைத் தரும் உயர்ந்த கல்வி, சேர்த்து வைக்கும் சொத்து, கட்டி வைக்கும் பங்களாக்கள், தூசும், குப்பையும் தான். அவைகள் அவர்களுக்குச் சிறப்பையும், ஆசீர்வாதத்தையும் சமாதானத்தையும் பெற்றுத்தராது. “ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல” என்றும் (லூக். 12:15) ஒருவன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (மத். 16:26) என்றும் திருமறை கூறும் பேருண்மைகளைச் சிந்தித்து பார்ப்பீர்.

# தேவனுக்கேற்ற ஞானம்

பென்னி மார்ட்டின்

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாலிபர்களாகிய உங்களுக்கு நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இக்கட்டுரையின் மூலமாக மறுபடியும் உங்களைச் சந்திப்பதில் மனமகிழ்ச்சியடைகிறேன். பொதுவாக வாலிபர்களாகிய நமக்கு அறிவை எப்படியாவது சம்பாதிக்க வேண்டும், ஞானவான்களாக இருக்க வேண்டும் என்கிற தணியாத அவா தொன்று தொட்டே இருந்து வருகிறது.

**அறிவைப் பெருக்கிக் கொள்ள அநேக வழிகள் கிடைப்பதும் இந்த வாலிபப் பருவத்தில் தான். வேதாகமத்தில் நாம் பார்க்கும் போது பிசாசானவன் சர்ப்பத்தின் உருவத்தில் வந்து தேவனால் தடை செய்யப்பட்ட அந்தக் கனியைப் புசித்தால் உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை, தீமை அறிந்து தேர்வகளைப் போல இருப்பீர்கள் என்றும், ஏவாளையும், ஆதாமையும் வஞ்சித்தான்.**

ஆதாமும், ஏவாளும் அறிவை அடைவதற்காகவே சாத்தானிடம் ஏமாந்து போனார்கள் (ஆதி. 3:4,6). தேவன் வாலிபர்களாகிய நாம் அறிவில் சிறந்து விளங்க வேண்டும், ஞானவான்களாயிருக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஆனால், நாம் எப்படிப்பட்ட அறிவை உடையவர்களா யிருக்க வேண்டும் என்று தேவன் தம்முடைய பரிசுத்த வாக்கியங்களில் சொல்லியிருக்கிறார்? இதைப் பற்றிய தெளிவு எல்லோர்க்கும் இருக்க வேண்டும். சரி, இப்போது வேத வசனங்களின்படி யார் ஞானவான்? ஒருவன் தன்னுடைய ஞானத்தை எப்படிக் காட்டுகிறான் என்று நாம் பார்ப்போம்.

**I ஞானவான் தன் நல் நடத்தையின் மூலமாக ஞானத்தைக் காட்டுகிறான் :**

யாக்கோபு ஆசிரியர் கூறும்போது உங்களில் ஞானியும், விவேகியுமா யிருக்கிறவன் எவனோ அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியை களை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன் என்று ஞானவானைப் பற்றிச் சொல்கிறார். இந்த வசனத்தின் மூலமாக உண்மையான ஞானம் சாந்தத்தோடே சேர்ந்து வருகிறது என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம். நிறையப் படித்த பலர் இந்த சாந்த குணம் இல்லாமல் இருக்கிறார்கள், இவர்கள் ஞானிகள் அல்ல என்று யாக்கோபு ஆசிரியர் சொல்கிறார். ஏனென்றால் அதிகம் படித்த அநேகருக்கு கர்வமும், மேட்டிமையும் தான் இருக்கும், சாந்த குணத்தை விலைக்குக் கேட்டாலும் தருவதற்கு அவர் களிடத்தில் இருக்காது (1 கொரி. 3:18-20) வசனங்களை நாம் வாசிக்கும் போது ஒருவனும் தன்னைத் தானே வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத் திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானி யாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக்கடவன். இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே ஞானிகளை

அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும், ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்றும் கர்த்தர் அறிந்திருக்கிறாரென்று எழுதியிருக்கிறது.

அப்படியென்றால் இவ்வுலகத்தின் ஞானம் நமக்கு அவசியமல்ல என்று பொருள்படாது. நாம் இந்த உலகத்தில் வாழும் வரை நமக்கு நிச்சயமாக இந்த உலகத்தின் ஞானம் அவசியம் தான். ஆனால், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் நாம் வளர வேண்டும். அப்போதுதான் நாம் ஆவிக்குரிய அறிவையும் பெற்றுக்கொள்ள முடியும், ஆவிக்குரிய வளர்ச்சியையும் நாம் அடையமுடியும். இன்றைய நாட்களில் நாம் வாலிபர்களைப் பார்க்கும் போது இப்பூமிக்குரிய அறிவைப் பெருக்கி அதன் மூலம் பொருள் ஈட்டவே முனைப்புக் காட்டுகின்றனர், அதற்காக எந்த ஒரு தியாகத்தையும் செய்யத் தயங்குவதில்லை. இப்பூமிக்குரிய அறிவைப் பெருக்கிக் கொள்வதில் எந்த தவறும் இல்லை. ஆனால், ஆவிக்குரிய அறிவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏனென்றால், கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு என்று சாலொமோன் ஞானி சொல்கிறார் (நீதி. 9:10) மேலும் ஆலோசனைக்குச் செவி கொடுக்கிறவனே ஞானமுள்ளவன் என்று வேதம் சொல்கிறது. ஆனால், மதியீனர் ஆலோசனைக்குச் செவி கொடுப்பதில்லை. அதனால் தான் ஆலோசனையும், மெய்ஞானமும் என்னுடையவைகள் என்று தேவன் சொல்கிறார் (நீதி. 8:14).

## II ஞானவான் பயந்து தீமைக்கு விலகுகிறான்

ஞானவான் தீமை என்ன செய்ததென்றும், அது என்ன செய்யும் என்றும் அறிந்து பாவத்தின் வஞ்சனையையும் அறிந்து அதை விட்டு விலகுகிறான் (எபி. 3:13). பக்தனாகிய யோபு சொல்லும் போது, பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி என்கிறார்.

**இன்று பல வாலிபர்கள் தங்களைப் படிக்க வைத்து ஆளாக்கிய பெற்றோர்களை கனவீனப்படுத்தி அந்திய நாட்களில் அவர்களைப் பராமரிக்காமல் இருப்பதை நாம் சமுதாயத்தில் பார்க்கிறோம்.**

இது ஞானமான காரியமல்ல. பெற்றோர்களைக் கனப்படுத்துபவன் ஞானவான் என்று வேதம் சொல்கிறது (நீதி. 13:1). வேதபாரகரும், பரிசேயர்களும் அதைத் தவிர்க்கப் பார்த்தபோது இயேசு அதைக் கண்டித்தார் (மத். 15:4-6). மேலும் சாலொமோன் ஞானி சொல்லும் போது தன் உதடுகளை அடக்குகிறவன் ஞானவான் என்று சொல்கிறார். ஒருவர் தன் உதடுகளை ஏன் அடக்க வேண்டும்? ஏனென்றால், சொற்களின் மிகுதியால் பாவமிருக்கும். மேலும், புதிய ஏற்பாட்டில் பேதுரு ஆசிரியர் சொல்லும் போது "ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்துக்கொள்ள வேண்டும்" என்று சொல்கிறார் (1 பேதுரு 3:10). நாம் நாவை அடக்குவதன் மூலமாக பொய், சாபம், கெட்ட வார்த்தைகள், வசனிப்பு, ஏமாற்று போன்ற பாவங்களைத் தவிர்க்க முடியும்.

எனவே தான் சங்கீதக்காரன் கர்த்தாவே என் வாய்க்குக் காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளும் என்று ஜெபிக்கிறார். இதுவே நம்முடைய அனுதின ஜெபமாக இருக்க வேண்டும்.

மேலும், கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டு அவைகளின்படி செய்கிறவன் எவனோ அவன் ஞானவான் என்று வேதம் சொல்கிறது (மத். 7:24,27). அநேக வாலிபர்கள் வசனங்களை ஆர்வமாகக் கேட்கிறார்கள். ஆனால், விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்கு பிசாசானவன் வந்து அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப் போடுகிறான். சில வாலிபர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள், கேட்டவுடன் போய் பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும், ஐசுவரியத்தினாலும், சிற்றின்பங்களினாலும் நெருக்கப்பட்டு கேட்ட வசனத்தின்படி நடவாமல் போகிறார்கள். ஆனால், இந்த சாக்குப்போக்குகளையெல்லாம் தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார். நம்முடைய பெரும்பாலான பிரச்சனைக ளெல்லாம் வாழ்க்கையின் முதன்மையான நோக்கத்தின் தவறான புரிந்து கொள்ளுதலின் அறிகுறிகள் தான். வேத வசனங்களை நாம் கேட்பது மாத்திரம் போதுமானதல்ல, அதன்படி செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டும் என தேவன் நம்மிடம் எதிர்பாக்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷ மானது வசனத்தை கேட்கிறவர்களையும் அதற்குக் கீழ்ப்படிகிறவர்களையு மே ஆசீர்வதிக்கிறது (எபி. 5:8,9).

**III ஞானவான் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறான் :**

நீதி 11:30ன்படி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளு கிறவன் ஞானவான். இது உண்மையிலேயே மிக ஞானமான காரியம் ஏனென்றால், இயேசு கிறிஸ்து ஒரு ஆத்துமாவின் மதிப்பைப் பற்றி பேசுகிறார். மத். 16:26ல் மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஆத்துமாவுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான் என்று கேள்விக் கேட்கிறார். இந்த கேள்வி நம்மை உருவக்குத்தக்கூடிய ஒரு கேள்வியாகும். ஏனென்றால், பண ஆசை பிடித்த சமுதாயத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

**ஆத்துமாவானது ஒருவர் கொண்டிருக்கும் எல்லா உடைமைகளைக் காட்டிலும் விலை உயர்ந்ததாகும்.**

மனிதர்கள் தங்கள் உடைமைகளைப் பாதுகாக்க அநேகப் பைத்திய மான காரியங்களைச் செய்கிறார்கள். ஆனால், விலையுயர்ந்த ஆத்துமாவுக் காக எதுவும் செய்வதில்லை. பலர், சில அற்பமான காரியங்களுக்காக ஆத்து மாவை இழந்து போகிறார்கள். மோசே அநித்தியமான பாவ சந்தோஷங் களை அனுபவிப்பதில் விருப்பமாயிருக்கவில்லை. ஆனால், தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு இனி வரும் பலன் மேல் நோக்கமாயிருந்தான் (எபி. 11:25,26). பிரியமான வாலிப உள்ளங்களே! மோசேக்கு இருந்த அதே மனப்பான்மை நமக்கும் இருந்தால் தான் தேவனுக்குப் பிரியமாக வாழ முடியும். அழிந்து போகின்ற இந்த

உலகத்தின் மீது நமக்கு ஆசை வேண்டாம். அழியாத ஆத்துமாவை பாதுகாத்து பரலோகத்தில் நித்தியநித்தியமாக வாழ்வதே நம் இலக்காக இருக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் நாம் நம் ஆத்துமாவை இழந்து விடக்கூடாது. எனவே தான் வேதாகமம் ஆத்துமாவை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானவான் என்று கூறுகிறது. ஆத்தும ஆதாயம் செய்வதற்காகவே நம்முடைய அருமை இரட்சகர் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கச் சொன்னார் (தானியேல் 12:3)ல் நாம் வாசிக்கும் போது அநேகரை நீதிக்குப்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போல் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிரியமானே வாலிபர்களே, நீங்கள் கிறிஸ்துவுக்காக எத்தனை ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தியிருக்கிறீர்கள்? நம்முடைய அருமை இரட்சகரை சந்திக்க வெறுங்கையுடன் போக வேண்டுமா? அல்லது ஒரு ஆத்துமாவைக் கூட ஆயத்தப்படுத்தாமல் மற்றவர்களுடைய இரத்தப் பழியை உங்கள் கையில் சுமந்து கொண்டு நியாயத்தீர்ப்பு நாளில் தேவனுக்கு முன்பாக நிற்கப் போகிறீர்களா? எனவே, பிரியமான வாலிபர்களே, தேவனுக்கென்று ஆத்துமாக்களை ஆதாயம் செய்வோம், ஞானவான்களாவோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

## தெய்வீக ஆறுதல்

**யாருமே வரவில்லை**
**யாருமே அழைக்கவில்லை**
**யாருமே அக்கறைப்படவில்லை**
**நான் அழுதேன், அழுதேன்**

**இப்பொழுது நான் இயேசுவைக் கண்டுகொண்டேன்**
**அவர் என்னில் அக்கறைப்படுகிறார்**
**அவருடைய உதவியினால்**
**நான் எல்லாவற்றையும் செய்கிறேன்.**


**நண்பர் தேவைப்படும் ஒருவருக்கு**
**நான் இப்பொழுது உதவி செய்திட முடியும்**
**ஏனெனில், இயேசுவாகிய நண்பரை**
**நான் நன்றாக அறிந்திருக்கிறேன்**

**கோடான கோடி நன்றி பிதாவே**
**இயேசுவை அனுப்பிக் கொடுத்தமைக்கு.**




# அனனியா - சப்பீராள்

ABEL R. NAYAGAM



ஹாய்! என்ன சிறுவர்களே, எல்லாரும் நலமாக இருக்கிறீர்களா? உங்கள் யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே வாழ்த்துக்கள். இந்த மாதமும் உங்களை இந்த இதழ் மூலம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தேவனுக்குப் பிரியமான குழந்தைகளாய் நீங்கள் ஒவ்வொருவரும் இருந்து வருகிறீர்கள் என்று விசுவாசிக்கிறேன். அப்படி இருக்கச் சிறுவர் பகுதி உங்களுக்கு உதவி செய்யும் என நம்புகிறேன். சரி, இந்த மாதத் திற்கான வேத அறிவுரை என்ன என்று பார்க்கலாமா?.

வேதாகமத்தை எடுத்துவிட்டீர்களா? புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் 5ஆம் அதிகாரத்திற்கு வாருங்கள். அப். 5:1-10 வரை வாசியுங்கள்.... வாசித்து விட்டீர்களா? சரி, இங்கே அனனியா, சப்பீராள் என்று பெயர் கொண்ட கணவன், மனைவியைக் குறித்துப் பார்க்கிறோம். கிறிஸ்துவின் சபை துவங்கின ஆரம்ப நாட்களில் நடந்த சம்பவம் இது. எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்களுக்கு உண்டானவைகளை விற்று சக கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்தார்கள். அந்த வரிசையில் அனனியா சப்பீராள் ஆகிய இருவரும் தங்க ளுக்குச் சொந்தமானதை விற்று அப்போஸ்தலர்களிடத்தில் கொடுத்தார்கள். அட, எவ்வளவு நல்ல மனிதன் என்று தானே நினைக்கத் தோன்றுகிறது? ஆனால் இல்லை, 5-ம் வசனத்தைக் கவனமாகப் படியுங்கள்... ஆம், ஒரு பங்கை வஞ்சித்து வைத்தான். அதினால் அவர்களுக்கு என்ன நடந்தது தெரியுமா? தேவன் அவர்களைத் தண்டித்தார். கணவனும், மனைவியும் ஒரே நாளில் வஞ்சனை செய்ததினாலே மரித்தார்கள். இதுதான் நடந்தது.

சரி, குழந்தைகளாகிய நாம் இந்தச் சம்பவத்திலிருந்து என்ன பாடம் கற்றுக்கொள்ள முடியும்? அநேகக் காரியங்கள் இருந்தாலும் நமக்குத் தேவையான இரண்டு முக்கியமான பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். தொடர்ந்து படியுங்கள்.

## I வஞ்சனை செய்யக்கூடாது

வஞ்சனை செய்யக்கூடாது என்றால், பொய் பேசுதல், பிறரை ஏமாற்றுதல் போன்ற காரியத்தை கிறிஸ்துவை அறிந்த சிறுவர்களாகிய நாம் செய்யக்கூடாது. நீதி. 12:22ல் "பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள் "என்று கூறுகிறது. தேவன் பொய் பேசுபவர்களையும், ஏமாற்றுபவர்களையும் வெறுக்கிறார். நம்மெல்லாரையும் நேசித்த இயேசு கிறிஸ்து மத். 5:37ல் " உள்ளதை உள்ளதென்றும் இல்ல தை இல்லதென்றும் சொல்லுங்கள் " என்று கூறுகிறார். ஆக, பொய் பேசுபவர்களைத் தேவன் வெறுக்கிறார்; உண்மை பேசுபவர்களை நேசிக்கிறார் என்ற பாடத்தை எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். உண்மையை மட்டுமே எப்பொழுதும் பேசுங்கள்.

## II தேவன் பார்த்துக்கொண்டே இருக்கிறார்

சில நேரங்களில் நாம் தவறு செய்யும்போது யாருக்கும் தெரியா மல் செய்கிறோம் என்ற எண்ணம் நமக்கு வரும். அப்பா, அம்மா, அண்ணன், அக்கா என யாருக்கும் தெரியாமல் செய்யலாம் எனத் தோன்றும். அதே போல் தான் அனனியா சப்பீராள் இருவரும் நினைத்தனர். ஆனால், தேவன் அவர்களைப் பார்த்துக் கொண்டு இருந்தார் என்பதை மறந் தார்கள். வசனம் என்ன சொல்கிறது தெரியுமா? " நீர் இருதயத்தைச் சோதித்து உத்தம குணத்தில் பிரியமா யிருக்கிறீர் " (1 நாளா. 29:17) .... ஆக நம் இருதயத்தை அவர் பார்க்கிறபடி யால் அவருக்கு மறைவாக நம்மால் ஒன்றும் செய்ய இயலாது இந்த எண்ணம் நமக்கு எப்பொழுதும் இருக்குமானால் நாம் தவறுகளைச் செய்யமாட்டோம். " அவருடைய கண் களுக்கு மறைவான சிருஷ்டி ஒன்று மில்லை " (எபி. 4:13). தேவனை நாம் ஏமாற்றி விட முடியாது என்று தான் வசனம் கூறுகிறது.

இவை தான் இந்த மாதத்திற் கான பாடங்கள், பொய், ஏமாற்றுதல் ஆகிய வஞ்சனைகளைச் செய்யக் கூடாது. தேவன் நம்மேல் நோக்கமாயி ருக்கிறார் என்று எப்பொழுதும் மறவா மல் இருக்க வேண்டும். அப்படி இருப்பீர்களானால் நிச்சயமாகத் தேவ னுக்குப் பிரியமான குழந்தைகளாக நீங்கள் இருக்க முடியும். இருப்பீர் களா? தேவன் உங்களை ஆசீர்வதிப் பார்.

## நாளும், நடப்பும்

- அலுவலகப் பயன்பாட்டுக்கு இந்தி, பிராந்திய மொழிகள் நல்லது.

  – குடியரசுத் தலைவர்

- வாக்காளர் பெயர் சேர்க்க அக்டோபர் 1 முதல் விண்ணப்பிக்கலாம்

  – தலைமைத் தேர்தல் அதிகாரி

- பள்ளி மாணவர்களுக்கான இரண்டாம் பருவப் பாட நூல்கள் செப்டம்பர் 25 க்குள் விநியோகிக்கப்படும்.

  – மேலாண்மை இயக்குனர்

- ஏழைகள் எளிதாகக் கடன் பெற வங்கிகள் உதவ வேண்டும்

  –ராகுல்காந்தி

- ஊடகங்கள் பரபரப்பை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கில் செய்திகள் வெளியிடக்கூடாது.

  –பிரதமர்

- கேன்சரில் இருந்து மீண்டு வந்த யுவராஜ் சிங்கிற்கு சென்னை கிரிக்கெட் ஆடுகளத்தில் பலத்த வரவேற்பு

- 4 வது முறையாக யு.எஸ்.ஓபன் டென்னிஸில் செரீனா சாம்பியன்.

# நிழலும், நிஜமும்

***(The Shadow and the Reality)***

**Bro. ஜே.ஆ. ஜேம்ஸ் ராஜ்குமார்**

அன்பானவர்களே!

சென்ற மாதத்தில் இஸ்ரவேல் மக்களுக்கு கொடுக்கப்பட்ட பழைய ஏற்பாடாகிய நியாயப்பிரமாணச் சட்டங்களை இயேசுவானவர் எப்படி நிறைவேற்றி முடித்தார், அது எப்படி நடந்தது என்பதைக் கவனித்தோம். இந்த மாதத்தில் புதிய ஏற்பாட்டை கவனிப்போமாக!

அதற்கு முன் விசுவாசமும் நீதியுமுள்ள உண்மைச் சேவர்களைப் பாராட்ட வேண்டும். இயேசுவானவர் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி முடிக்கும்படி, அவருடைய பூமிக்குரிய தகப்பனாராக எண்ணப்பட்ட யோசேப்பும் தாயாகிய மரியாளும் செய்த சேவை மிகவும் பாராட்டத் தக்கது ஆகும். ஏனென்றால், குழந்தையாயிருந்த இயேசுவால் நியாயப் பிரமாணச் சட்டங்களை தானாக நிறைவேற்ற முடியாது. ஆகையால், பெற்றோராக யோசேப்பும் மரியாளும் சிறப்பாக அதைச் செய்தனர். உதாரணமாக; குழந்தை இயேசுவுக்கு எட்டாம் நாளில் விருத்தசேதனம் செய்வது, அவருக்காக பலி செலுத்துவது போன்ற நியாயப்பிரமாணச் சட்டங்களை சரியாக நிறைவேற்றினார்கள். (லூக். 2:21-24,39) இதைச் செய்ததற்காக இயேசுவின் பூமிக்குரிய பெற்றோர் கடவுள்கள் ஆக முடியாது. ஏனென்றால், அவர்கள் ஒன்றையும் சிருஷ்டிக்கவில்லை. ஒருவர் கடவுளாக அல்லது தேவனாக இருக்க வேண்டுமானால் அவருக்கு இருக்க வேண்டிய முதல் தகுதி அவர் ஒரு சிருஷ்டிகராயிருக்க வேண்டும். இந்த வகையில் யோசேப்பும், மரியாளும் கடவுள்கள் அல்ல. ஆனால், அவர்கள் நம்மால் பாராட்டப் படவேண்டியவர்கள் ஆவர்.

ஆகையால், இயேசுவானவர் நியாயப்பிரமாணத்தில் சிறுவயது முதல் ஒரு சட்டத்தையும் மீறாதவராயிருந்தபடியால் அவரிடத்தில் ஒரு பாவமும் இல்லை. அவர் பெரியவராக வளர்ந்தபோது பழைய ஏற்பாட்டின் எல்லாச் சட்டங்களையும் சரியாகக் கைகொள்பவராக வாழ்ந்தார். உபா. *6:25*ன்படி அவர் முழுமையான நீதிமானானார்; " நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டபடியே நாம் அவர் சமூகத்தில் இந்த எல்லாக் கட்டளைகளின்படியும் செய்யத் சாமாதானமாயிருந்தால், நமக்கு அது நீதியாயிருக்கும் என்று சொல்வாயாக ". இதைக் குறித்து இயேசுவான வர் ஒரு சமயத்தில் தைரியமாக, " ...இந்த உலகத்தின் அதிபதி (பிசாசு) வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை " என்றார், யோவா *14:30* (*1* பேதுரு *2:22*) இயேசுவினிடத்தில் பிசாசானவன் சுட்டிக்காட்டும்படி எந்த ஒரு நியாயப்பிரமாண சட்டத்தையும் அவர் மீறவில்லை என்பதும் அதன் அர்த்தமாகும்; இப்படியாக இயேசுவானவர் அதை முடித்து

விட்டார். இன்றைய நாள் வரை நியாயப்பிரமாணம் நிறைவேற்றி முடிக்கப் படாமல் இருந்திருக்குமானால் புறஜாதி மக்களாகிய நமக்கு கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பு இன்னும் இல்லாமல் இருந்திருக்கும்.

சில வருடங்களுக்கு முன்பு நாங்கள் ஒரு குடும்ப வேத வகுப்பில் போதித்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது தற்செயலாக, வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்த ஒருவரிடம் நீங்கள் மாம்சத்தின்படி இஸ்ரவேலரா? புறஜாதியாரா? என்று கேட்டோம். அவர் சற்றும் தயங்காமல் " நான் ஒரு இஸ்ரவேலன் " என்றார். நாங்கள் மீண்டும் அவரிடம், கேள்வியை நன்றாக கவனியுங்கள் "*மாம்சத்தின்படி*" நீங்கள் ஒரு இஸ்ரவேலரா? புறஜாதியாரா? என்றோம். மீண்டும் அவர் உறுதியாக அவரை மாம்சத்தின்படி இஸ்ரவேல னாக சாதித்தார். அவர் யார் என்பதைப் புரிந்து கொள்ளும்படி அவர் முன் சில கேள்விகளை வைத்தோம். 1. உங்கள் முன்னோர்கள் யாக்கோபின் குமாரராகிய ரூபன், சிமியோன், லேவி, யூதா ஆகிய 12 பிள்ளைகளின் வம்சா வழியைச் சேர்ந்தவர்களா? 2. எகிப்தில் அடிமைகளாயிருந்தார்களா? 3. சிவந்த சமுத்திரத்தைக் கடந்தார்களா? 4. வனாந்திரத்தில் மன்னாவைப் புசித்தார்களா? 5. சீனாய் மலையில் 10 கற்பனைகளைப் பெற்றவர்களா? 6. விருத்தச்சேதனம் பண்ணும் பழக்கம் உள்ளவர்களா? 7. கானான் தேசத்தில் வாழ்ந்தார்களா? 8. இதற்கான ஆதாரங்கள் உங்களிடம் உள்ளதா? என்கிற கேள்விகளைக் கேட்டதும் யோசிக்க ஆரம்பித்தார்.

பிறகு சொன்னார் " நாம் மாம்சத்தின்படி இஸ்ரவேலர்கள் அல்ல " என்றார். இந்தப் புரிந்துகொள்ளுதலை தேவன் அவருக்குக் கொடுத்ததற் காக தேவனுக்கு நாங்கள் நன்றி சொன்னோம். அதன்பிறகு இஸ்ரவேலின் சரித்திரத்தை அவருக்கு விளக்கினோம். மோசேயின் காலம், யோசுவாவின் காலம், நியாயாதிபதிகளின் காலம், இணைந்த ராஜ்யத்தின் காலம், பிரிந்த ராஜ்யத்தின் காலம் (இந்த காலத்தில் இஸ்ரவேல் என்ற பெயரில் இருந்த வடராஜ்யமாகிய 10 கோத்திரத்தார் வீழ்ச்சியடைந்து, சுத்தமான இஸ்ரவேலர் என்று சொல்ல முடியா அளவுக்கு புறஜாதியாரோடு கலந்து விட்டதையும்), தென் ராஜ்யமாகிய யூதா, பென்யமீன் பாபிலோனுக்கு சிறைபட்டுப்போய் மீண்டும் வந்து தேவாலயத்தைக் கட்டி, யூதேயா என்ற பெயரிலே மேசியா வரும் வரை காத்திருந்தாலும் அவர்களே மேசியாவைக் கொன்று விட்டதையும் அவருக்கு விவரித்தபிறகு, அவர் மாம்சத்தின்படி இஸ்ரவேலன் அல்ல வேதத்தின்படி புறஜாதியைச் சேர்ந்தவன் தான் என்பதை ஒப்புக்கொண்டார். ஏன் இதை இவ்வளவு விபரமாக சொல்ல வேண்டியது என்றால், இன்றைக்கும் அநேகருக்கு அவர்கள் யார் என்பது குழப்பமாக உள்ளது. இப்படி குழப்பத்தில் உள்ளவர்கள் தங்களுக்குத் தாங்களே மேற்கண்ட கேள்விகளைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

இன்னொரு முறை வேதவகுப்பிலே, ஒரு குழுவினிடத்தில் புதிய ஏற்பாட்டிலே பிரதானமான கற்பனை எது? என்று கேட்டோம். அவர்கள் மத்தேயு *22:37-39* வரையுள்ள வசனப்பகுதியைச் சுட்டிக்காட்டி இதுதான் புதிய ஏற்பாட்டின் பிரதான கற்பனைகள் என்றார்கள். பிறகு நாங்கள் அந்த வசனப்பகுதியை வாசித்தோம். "*இயேசு அவனை நோக்கி; உன் தேவனாகிய*

*கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுமனதோடும் அன்பு கூறுவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூறுவாயாக என்பதே* ". இதை மேலோட்டமாகப் படித்தால் இவைகள் தான் புதிய ஏற்பாட்டின் பிரதான கற்பனைகள் என்று நம்பத் தோன்றும். ஏனென்றால், மத்தேயு முதலாம் அதிகாரத்திற்கு முன்பு பெரிய எழுத்துக்களில் புதிய ஏற்பாடு என்று அச்சிடப்பட்டிருப்பதால் தாராளமாக அப்படி எண்ணலாம். இதற்காக கிறிஸ்துவானவர் சுவிசேஷப்புத்தகங்களில் புதிய ஏற்பாடு போதிக்கவில்லை என்று அர்த்தமல்ல போதித்திருக்கிறார். அதைப் பற்றி நாம் சற்று பிற்பாடு கவனிக்கப்போகிறோம்.

ஆனால், அந்த வசனங்களை நாம் சற்று கூர்ந்து கவனித்தால் அதில் இருக்கக்கூடிய உண்மை விளங்கும். பெரும்பாலும் வசனத்தின் அல்லது வசனங்களின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளும்படி அந்த வசனப்பகுதிக்கு மேலே மற்றும் கீழே உள்ள வசனப்பகுதிகளைக் கருத்தோடு படித்துப் பார்க்க வேண்டும். இதனடிப்படையில், மத்தேயு *22:35,36* வசனங்களை வாசித்தோம். "அவர்களில் நியாயசாஸ்திரி (Lawyer) ஒருவன் அவரைச் சோதிக்கும்படி; போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான்". அந்த வக்கீல் கேட்ட கேள்வியை கவனித்தால் புதிய ஏற்பாட்டிலே எது பிரதானமான கற்பனை என்று அவன் கேட்கவில்லை. புதிய ஏற்பாடு அல்லது புதிய உடன்படிக்கையைப் பற்றி அவனுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவன் கேள்விகேட்ட காலம் பழைய ஏற்பாட்டின் காலம். ஆகையால், அவன் கேட்ட கேள்விக்குத்தான் இயேசுவானவர் பதிலளித்தார்.

இதை இன்னும் உறுதி செய்யும்படி மத்தேயு *22:40*ஐ நாம் கவனிக்க வேண்டியது அவசியமாகிறது. "இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப் பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார்". இயேசுவானவருங்கூட இதில் புதிய ஏற்பாடு முழுமையும் அடங்கியிருக் கிறது என்று கூறவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். இப்பொழுது நம்முடைய கேள்வி என்னவென்றால், மத்தேயு *22:37,39*ல் இயேசுவானவர் சொன்ன வசனங்கள் பழைய ஏற்பாட்டின் சுருக்கமா அல்லது புதிய ஏற்பாட்டின் சுருக்கமா என்பதுதான். தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு பழைய ஏற்பாட்டை கொடுக்கும்போது அதற்கு அடிப்படையாக 10 கற்பனைகளைக் கொடுத்தார். அந்த 10 கற்பனைகளில் முதலில் உள்ள 4 கற்பனைகள் "தேவனுக்கும், மனிதனுக்கும்" உள்ளவைகள் அல்லது தேவனை மனிதன் எப்படி அணுக வேண்டும், ஆராதிக்க வேண்டும் என்ப தாகும். அந்த 4 கற்பனைகளின் சுருக்கமாக மத்தேயு *22:37*ம் வசனமாகச் சொன்னார். மேலும், இந்த வசனம் பழைய ஏற்பாட்டிலே சொல்லப் பட்டி ருந்தது, லேவி. *19:18.* இப்பொழுது அவர்கள் புரிந்து கொண்டு, இந்த வசனங்கள் பழைய ஏற்பாட்டின் சுருக்கமானால் புதிய ஏற்பாடு எங்கே? என்றார்கள். அதுபோல நீங்களும் கேட்கலாம்!.

நாம் சென்ற மாதங்களில், நியாயப்பிரமாணம் பெலவீனமாய் இருந்த தால் அது நீக்கப்பட்டது என்று பார்த்தோம். அப்படியானால் மத். *22:37,39* வசனங்களில் சொல்லப்பட்ட கற்பனையில் என்ன பெலவீனம்

என்று கேட்கலாம். முதலாவது இது மனிதனுடைய அளவாயிருக்கிறது. உன் இருதயம், உன் ஆத்துமா, உன் மனது என்ன சொல்லுகிறதோ அந்த அளவாக தேவனை ஆராதிக்கலாம் அல்லது தேவனுக்குப் பலி செலுத்தலாம். பழைய ஏற்பாட்டின்படி ஒருவருக்கு ஆட்டுக்குட்டி வாங்க வசதியில்லா விட்டால் அவர் 2 புறா குஞ்சுகளை தேவனுக்குக் கொடுக்கலாம். இது மனிதன் திட்டமிடுகிற அளவாயிருந்தது. அதேபோல "உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல" என்பதும் மனிதனுடைய அளவாயிருந்தது. ஒரு மனிதன் தன்னைத் தவறாக நேசித்தால் அவன் மற்றவர்களையும் அதே தவறில் நடத்திவிடுவான். இப்படித்தான் இன்றைக்கு அநேக வித்தியாசமான போதனைகளும், பிரிவினைகளும் உண்டாயிருக்கிறது. தான் செய்வது தவறில்லை என்று ஒருவன் நினைத்தால் அந்தச் சூழ்நிலைக்கு மற்றவர்களையும் வழிநடத்தி விடுகிறான். இப்படித்தான் இன்றைக்கு அநேகர் குடிகாரர்களாகவும், புகை பிடிப்பவர்களாகவும், தவறான போதனைகளை நம்புகிறவர்களாகவும், பல்வேறுபட்ட பண சிக்கல்களில் மாட்டிக் கொள்கிறவர்களாகவும், ஏன் விக்கிரக ஆராதனை கூட செய்கிறவர்களாகவும் போய்விடுகிறார்கள். இதற்குப் பழைய ஏற்பாட்டில் ஏராளமான உதாரணங்களைச் சொல்லலாம். அப்படிச் சொல்லப்போனால் நம்முடைய பாடத்தின் நோக்கம் தவறிவிடும். ஆகையால், மனிதனுடைய அளவாக இருந்த நியாயப்பிரமாணத்தைத் தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலமாக நீக்கிவிட்டு தேவனுடைய அளவாக அல்லது தெய்வீக அளவான சட்டங்களைக் கொடுத்தார்.

| பழைய ஏற்பாட்டின் சுருக்கம் | கிறிஸ்துவின் புதிய ஏற்பாடு |
|---|---|
| "போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பிரதானமானது என்று கேட்டான். இயேசு அவனை நோக்கி; உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை " (மத். 22:36,38). | "அதற்கு இயேசு; ...நான் சொல்லுகிறதை நம்பு ...எங்கும் பிதாவைத் தொழுது கொள்ளுங் காலம் வருகிறது... தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்கிற வர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத்தொழுது கொள்ள வேண்டும் என்றார்" (யோவான் 4:21,24) |
| "இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே" (மத். 22:39). | "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்". (யோவான் 13:34). |
| **இது நிழல்** | **இது நிஜம்** |

இப்பொழுது கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு சட்டங்களைக் கவனியுங்கள். அவைகள் மனிதனுடைய அளவாக இருக்கவில்லை, அதற்குப் பதிலாக அவை முழுவதும் தேவனுடைய அளவாயிருக்கிறது. ஆவியோடும், உண்மையோடும் என்பது தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு பரிசுத்த ஆவியினாலே அப்போஸ்தலர்கள் மூலமாய்க் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டின்படி (ஆவியின்படி) உண்மையாய் (கிறிஸ்துவின் உபதேசத்தின் படி வாழ்ந்து கொண்டு, தேவனைக் கிறிஸ்துவின் சிந்தையோடு பரிசுத்த ஆவியானவர் வேத வசனத்தில் வழிகாட்டியிருக்கிறபடி) தொழுது கொள்ள வேண்டும். இதில் மனிதன் எந்த மாற்றமும் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் அது தேவன் ஏற்றுக் கொள்ளுகிற ஆராதனையாயிருக்க முடியாது. பழைய, புதிய ஏற்பாட்டுகளின் ஆராதனைகளை விவரிக்கும் போது இன்னும் அதிகமான விளக்கங்களைக் கவனிக்கலாம்.

அடுத்தது, அன்பைப்பற்றி பார்ப்போம். எனக்கும்கூட யோவான் *13:34* ஐ இந்த நோக்கத்தோடு முதன்முறையாக படித்தபோது; ஒரு தெய்வீக அன்பை நமக்குச் சொல்லாமல் மறைத்துவிட்டார்களே என்பது ஆச்சரியமாயிருந்தது. இந்த அன்பு நம்மை நாம் நேசிப்பதுபோல மற்றவர் களை நேசிப்பது அல்ல. தேவன் நம்மை நேசிப்பது போல அல்லது கிறிஸ்து நம்மிடத்தில் அன்பு கூறுவது போல நாம் மற்றவர்களிடத்தில் அன்பு கூற வேண்டும். இப்படிச் செய்வதற்கு முதலாவது அந்த அன்பிலே கிறிஸ்துவின் தாழ்மை நமக்கு வேண்டும், பிலிப்பியர் *2:4,8*; மத். *5:3*. அடுத்தது, அந்தத் தெய்வீக அன்பை நடைமுறைப்படுத்தும்படி அவருடைய சுயநலமற்ற குணம் வேண்டும், யோவான் *10:11*. எல்லா ஆத்துமாக்களும் தேவனுடையவைகள், அந்த எல்லா ஆத்துமாக்களும் கண்டிப்பாகப் பரலோகத்திற்குச் செல்ல வேண்டும்; அதற்குத் தேவைபட்டால் என்னுடைய ஜீவனையும் நான் கொடுப்பேன் என்கிறது கிறிஸ்துவின் அன்பு அதாவது, தெய்வீக அன்பு, *1* யோவான் *2:5,6,3:16* இது நமக்கு வேண்டும்.

இந்த நோக்கத்தோடு தான் கிறிஸ்து போதித்தார், வாழ்ந்தார். அப்போஸ்தலர்களும் அப்படியே வாழ்ந்தார்கள். முழு குடும்பமும் அல்லது சபையும் பரலோகத்திற்குப் போக வேண்டும் என்று குடும்பத்தில், சபையில் உள்ள ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டும். இப்படிக் கிறிஸ்துவின் அன்போடு சிந்தித்தால் யாரும் ஆராதனையை விட்டுவிடமாட்டார்கள். இந்த நிழலும் நிஜமும் கட்டுரையை வாசிக்கின்ற நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களோடுங்கூட நாங்களும் நிச்சயமாக பரலோகத்திலே நித்திய ஜீவனைப் பெற்று தேவனோடு வாழவேண்டும் என்பதே எங்களுடைய அன்பின் நோக்கமாகவும் இந்தக் கட்டுரையின் நோக்கமாகவும் இருக்கிறது. தொடர்ந்து இந்த நிழலும் நிஜமும் கட்டுரையைப் படிப்பதற்காக உங்களுக்கு நன்றி! தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

**(தொடரும்)**



# ஞானஸ்நானத்தின் அழகும், முக்கியத்துவமும்

***Sunny David***

ஒவ்வொரு ஆண் மற்றும் பெண்ணுடைய மிகப்பெரிய தேவை பாவத்திலிருந்து இரட்சிப்படைவது. மனித இனத்துக்கான தேவனுடைய மிகப்பெரிய செய்தி: " தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் " என்பது (யோ. *3:16*). " நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம் மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் என்று வாசிக்கிறோம் (ரோமர் *5:8*). கடைசியாக, நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் " (2 கொரி. *5:21*)

தேவன் தம்முடைய குமாரனை நமக்காக சிலுவையில் மரிக்க ஒப்புக் கொடுத்தார். அவ்விதமாக இயேசு நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியானார். இதைத் தேவன் நம் இரட்சிப்பிற்காக செய்திருக்கிறார். நம் பாவங்களிலிருந்து இரட்சிக்கப் பட நாம் என்ன செய்ய வேண்டும்?.

தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின்படி கிறிஸ்து பாவிகளுக்காக மரித்தார் என்பதை ஒருவர் விசுவாசிக்க வேண்டும். ஒருவர் பாவத்திலிருந்தும், அறியாமையிலிருந்தும் மனந்திரும்புவதன் மூலம் பாவத்திற்கு மரிக்க வேண்டும், ஒருவர் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும். அதன் பிறகு, ஒருவர் புதிய மனிதனுடைய உயிர்த்தெழுதலைக் காட்டும்படி தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்பட்டு அல்லது மூழ்கி ஞானஸ்நானம் பெற வேண்டும். இத்தகைய செயல்கள் மூலமாகத்தான் ஒருவர் ஆவிக்குரிய பிரகாரமாக புதிதாய்ப் பிறக்கிறார். கிறிஸ்து நிக்கொதேமுவுக்கு சொன்னது போல், இப்படிச்


செய்வதன் மூலம் ஒருவர் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கும் உரிமையைப் பெறுகிறார். " ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் " (யோவான் 3:5).

கிறிஸ்து வேத வாக்கியங்களின்படி நம்முடைய பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மறுபடியும் உயிர்த்தெழுந்தார் என்கிற இரட்சிப்பின் நற்செய்தியை ஏற்றுக் கொள்ளும்படியாய் இருதயத்தில் விசுவாசித்து மனதில் திரும்பி, வாயினால் அறிக்கை செய்து, தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுகிறார் (1 கொரி. 15:1,4). ஆகவே, இரட்சிப்பிற்கு ஞானஸ்நானமானது மிக ஆழமான, முக்கியமான கீழ்ப்படிதலின் செயலாயிருக்கிறது. ஞானஸ்நான செயலின் மூலமாக கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலைப் பற்றிய நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. ஒருவர் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக, பாவமன்னிப்பைப் பெறுவதற்கு முன்பாக, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவதற்கு முன்பாக ஞானஸ்நானம் பெறவேண்டும். இதைப் பற்றி நம் இரட்சகர் சொல்வதைக் கவனியுங்கள். விசுவாசமுள்ளவனாகி "ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற்கு 16:16). ஆவியினால் நிறைந்த அப்போஸ்தலனாகிய பேதுரு எங்கனம் போதித்தார் என்று கவனியுங்கள், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் " (அப். 2:38).

வேதாகமத்தின்படி சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறது (எபே. 1:3) கொலோ. 1:14ல் " கிறிஸ்துவுக்குள் அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது " என்று வாசிக்கிறோம். இப்போது, சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அவருடைய இரதத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் கிறிஸ்துவுக்குள் எப்படி இருக்க முடியும்? தேவ ஆவியினால் ஏவப்பட்ட பவுலே இதற்கு பதில் சொல்லட்டும். கலா. 3:27ல், பவுல் இப்படியாக விவரிக்கிறார். "ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே". மற்றுமொரு இடத்தில் ரோமர் 6:3,5ல், பவுல் இவ்விதமாக எழுதுகிறார். " கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும், ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம், ஆதலால், அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்

களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்".

மேற்கண்ட வசனப் பகுதிகள் மூலமாக ஞானஸ்நானத்தின் மாபெரும் முக்கியத்துவத்தை மாத்திரம் நாம் கற்றுக்கொள்வதில்லை. ஆனால், ஞானஸ்நான செயல் கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலைப் பற்றிய நற்செய்தியை மிக அழகாக விவரிப்பதையும், நாம் கற்றுக்கொள்ளுகிறோம். கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த பிரதான கட்டளையில் ஞானஸ்நானத்தைச் சேர்த்ததில் ஆச்சரியமே இல்லை. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனிதனுடைய இரட்சிப்பு என்னும் மாபெரும் வேலையை முடித்த பிறகு தம்முடைய சீஷர்களிடம் அவர் சொன்ன கடைசி வார்த்தைகள் இதோ: ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் (மத். 28: 19,20) என்றார்.




## வேதாகமத்தைப் படியுங்கள்! ஆனால், எப்படி?

**முதலாவது, படிப்பதை வகைப்படுத்துங்கள்.**

அதாவது, சரித்திரமா, தீர்க்கதரிசனமா, பாடலா, நற்செய்தியா, நிருபமா என்று

**இரண்டாவது, படிப்பதை ஒழுங்குபடுத்துங்கள்**

அதாவது, குறிப்பிட்ட பகுதிக்கு முன்னும், பின்னும் இருப்பதை கவனித்து முக்கியமானதைக் குறிப்பெடுங்கள்.


**மூன்றாவது, பரலோக சிந்தையோடு படியுங்கள்.**

ஏனெனில், வேதாகமம் மீட்பு, இரட்சிப்பு பற்றிப் பேசும் புத்தகம்

**இறுதியாக, முக்கியமானதை மனப்பாடம் செய்யுங்கள்**

எந்தளவு மனதில் வசனங்களை உள்வாங்குகிறோமோ அந்தளவு ஆன்ம நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**" கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் பிரியமாயிருக்கிற மனிதன் பாக்கியவான் " (சங். 1:2)**



# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

## பாடம்-22. பிரிவினைச் சபைகளின் உபதேசங்கள்

**K. பாஸ்கர்**

அன்பான வாசகர்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள். இந்தத் தொடரின் மூலமாக வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து கொண்டு வருகிறீர்கள். நீங்கள் அறிவதோடு மாத்திரமல்ல அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதே எனது ஜெபமாகும். இந்த மாதத்திலும் வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து கொள்வதற்கு பிரிவினை சபைகளின் உபதேசங்கள் என்ற பாடம் உங்களைத் தெளிவுபடுத்தும் என்று நான் நம்புகிறேன்.

ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக் கடவன் என்று வேதாகமத்தில் கட்டளையிடப்பட்டுள்ளது (1 பேதுரு 4:11) இந்தக் கட்டளையை மீறும் பொழுது அநேக பிரிவினை சபைகளும், மாறுபாடான உபதேசங்களும் தோன்றுகின்றது. அதனால் கிறிஸ்தவம் பிரிந்து கிடக்கின்றது. சிலர் கத்தோலிக்கர் என்றும், சிலர் புராட்டஸ்டண்டு என்றும், சிலர் பெந்தெகொஸ்தே என்றும் பெருமையாகச் சொல்லிக் கொள்ளுகின்றனர். ஆனால், கிறிஸ்தவர்கள் என்று யாரும் அழைத்துக் கொள்வதில்லை! முதல் நூற்றாண்டில் முதன் முதலில் சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்று பேர் வழங்கிற்று (அப். 11:26) எனவே நாம் கிறிஸ்தவர்கள் என்று மட்டும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுவோம்.

### I. *ரோமன் கத்தோலிக்க சபையின் உபதேசம்*

இவர்கள் வேதாகமத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை மனித பாரம்பரியங்களுக்கும், மனித உபதேசத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அதில் ஒன்றுதான் ஜென்ம பாவம் என்ற உபதேசம். அந்த உபதேசமாவது பெற்றோர் செய்த பாவம் பிள்ளைகளுக்கும் வருகிறது என்கிறார்கள். ஆனால், பரிசுத்த வேதாகமத்தில் பிதாக்கள் (பெற்றோர்கள்) திராட்சக் காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப் போயின என்னும் பழமொழியை நீங்கள் இஸ்ரவேல் தேசத்தைக் குறித்துச் சொல்லுகிறது என்ன? இனி இஸ்ரவேலில் இந்தப் பழமொழியைச் சொல்வது இல்லை என்பதை என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார். இதோ எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள் தகப்பனின் ஆத்துமா எப்படியோ அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது, பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும். இதெப்படி? குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமக்கிறதில்லையா என்று நீங்கள் கேட்டால் குமாரன் நியாயத்தையும், நீதியையும் செய்து என் கட்டளைகளைக் கைக் கொண்டு அவைகளின்படி செய்ததினால் அவன் பிழைக்கவே

பிழைப்பான். பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும். குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை. தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தை சுமப்பதுமில்லை நீதிமானுடைய நீதி அவன் மேல் தான் இருக்கும். துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன் மேல் தான் இருக்கும் என்று கர்த்தர் விளக்கமளிக்கிறார் (எசே. 18:1,20). ஜென்ம பாவம் என்ற போதனை கர்த்தருடைய வேதத்திற்கு முரணானதாக உள்ளது. இந்த உபதேசத்தின் அடிப்படையில் கொடுக்கப்படும் குழந்தை ஞானஸ்நானம், புதுநன்மை போன்றவைகள் வேதத்தில் இல்லாதவைகளாகும். விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே! (ரோமர் 14:23).

தேவத்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் மூவர் இருக்கின்றார்கள் என்று தேவத்துவத்திற்கு ஒப்பாக வைத்து வழிபடுகின்றனர். மரியாளை தேவ மாதா என்றும் பரலோகத்திற்குச் சென்றதாகவும் பூமியிலே பல அற்புதங்களைச் செய்வதாகவும் உபதேசிக்கின்றனர். மேலும் விருப்பப்படுகிறவர்களுக்கு தரிசனம் கொடுப்பதாகவும் உபதேசிக்கின்றனர். இப்படிப்பட்ட உபதேசங்கள் யாவும் வேதத்திற்கு முரண்பாடாகவே காணப்படுகிறது. இயேசு கிறிஸ்து மட்டுமே மரித்து அடக்கம் பண்ணப் பட்டு உயிர்தெழுந்த முதற்பேரானவர் அதன்பிறகு அவருடைய வருகையின் நாளிலே அவருடையவர்கள் உயிர்த்தெழுவார்கள் (1 கொரி. 15:23). இயேசு கிறிஸ்துவைத் தவிர யாரும் பரலோகத்திற்கு ஏறினவர்கள் யாருமில்லை என்று இயேசு கிறிஸ்து கூறினார் (யோவான் 2:4). மரியாளும் இதோ நான் ஆண்டவருக்கு அடிமை அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்குக் கீழ்ப் படிந்தாள் (லூக்கா 1:38; யோவான் 2:5) அருமையானவர்களே, மரியாளைப் போல நாமும் ஆண்டவருக்குக் கீழ்ப்படிந்து அவருடைய வார்த்தையின்படி செய்வோம். அதை விட்டு விட்டு மரியாளை வணங்குவதும், செப் 8ந் தேதி பிறந்த நாள் கொண்டாடுவதும், தேர்த் திருவிழாக் கொண்டாடுவதும், தேவ தூஷணம் செய்வதாக இருக்கின்றது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார் இயேசு (மத். 15:9).

## II *புராட்டஸ்டண்ட் சபைகளின் உபதேசங்கள்*

ரோமர் கத்தோலிக்க சபை தங்களின் சபை என உரிமை கோரும் லுத்தரன் சபை, மெதடிஸ்ட் சபை, எபிஸ்கோபஸ் சபை போன்றவர்கள் படிப்படியாக பிரிந்து போய் தங்களை புராட்டஸ்டண்ட் சபையினர் என்று அழைத்துக் கொண்டனர். தங்கள் சபையின் சட்டதிட்டங்களை வகுக்க இந்த பிரிவுக் கூட்ட போதகர்கள் ஒன்றாகக் கூடி முடிவெடுப்பார்கள் இதற்கு பாஸ்டரேட் கமிட்டி என்று பெயர்.

ஆனால், வேத வசனம் கூறுகின்றது இயேசு கிறிஸ்துவுக்கு மட்டும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத். 28:18) அவரே சபைக்கு தலைவர் (எபே. 5:25) அவரே சபைக்கு சட்டதிட்டங்களை வகுப்பவர். (2 தீமோ. 1:13) பாஸ்டரேட் கமிட்டி அல்ல!

மேலும் இவர்களின் ஒட்டு மொத்த உபதேசமானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் (அப். 16:31). மற்றபடி ஞானஸ்நானம் அவசிய மில்லை என்று உபதேசிக்கின்றனர். ஆனால், வேத வசனம் அதோடு நின்று விடாமல் அவனுக்கும், அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். மேலும் இராத்திரியில் அந்நேரத்திலே தானே அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று சொல்லுகின்றது (அப். 16:32,34) எனவே, அவர்கள் உபதேசிப்பது தவறு. வேத வசனங்களை முழுமையாக போதிப்பது அவசிய மானது. வேத வசனங்களைக் கூட்டியோ, குறைத்தோ உபதேசித்தால் தண்டனைக்குரியதாகும் (வெளி. 22:18,19).

ஞானஸ்நானமானது மனிதனுடைய ஆலோசனைப்படி செய்யப்படு வதல்ல அது தேவனுடைய கட்டளைப்படி செய்யப்பட வேண்டும் (லூக். 7:30) எனவே, ஞானஸ்நானத்தை வேண்டாம் என்று விலக்க முடியாது (அப். 10:47,48) விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான் விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று இயேசு கிறிஸ்து கட்டளையிட்டிருக்கிறார். (மாற்கு 16:16) இதன் அடிப்படையில் தான் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் " 11 சம்பவங்கள் " இரட்சிக்கப்பட்டவர்களைக் கூறுகின்றது. இதில் யாரும் ஞானஸ்நானம் பெறாமல் இரட்சிக்கப்பட்டதாக வேத வசனம் கூறு வதில்லை! ஆகவே விசுவாசத்தினால் மட்டும் இரட்சிக்கப்படுதல் அல்லது இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெறுதல் போன்ற உபதேசங்கள் தவறானது.

புராட்டஸ்டண்ட் சபைகளின் தலைவரில் ஒருவரான இங்கிலாந்து மன்னர் 8ம் ஹென்றி என்பவர் ரோமன் கத்தோலிக்க சபையிலிருக்கும் போது தனது முதல் மனைவி இருக்கும்போது இரண்டாம் மனைவியைத் திருமணம் செய்து கொள்ள போப்பாண்டவரிடம் அனுமதி கேட்டார். அனுமதி மறுக்கப்பட்டதால் கத்தோலிக்க சபையிலிருந்து விலகி இங்கிலாந்து சபை என்ற பெயரில் அவர் ஆரம்பித்தார். அதுவே இப்பொழுது தென்னிந்தியத் திருச்சபையாக உள்ளது (C.S.I).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து முதல் மனைவி இருக்கும்போது இரண்டாம் மனைவியைத் திருமணம் செய்வது விபச்சாரம் என்றார் (மத். 19:9) மனைவியானவள் உயிரோடிருக்கும் வரை திருமணச் சட்டத்தால் இருவரும் கட்டப்பட்டிருக்கிறார்கள். மரித்த பிறகே இதிலிருந்து விடுதலையடைகிறார்கள் (1 கொரி. 3:39) என்று வேத வசனம் கூறுகின்றது. எனவே 8ம் ஹென்றியின் உபதேசம் தவறானது புரட்டஸ்டஸ்ட் சபைகளின் ஒட்டுமொத்த உபதேசமும் வேதத்திற்கு முரண்பாடாக இருக்கிறது. இவர் களின் குழந்தை ஞானஸ்நானம், மாதத்திற்கு ஒருமுறை திருவிருந்து, பாஸ்ட ரேட் கமிட்டி, இசைக் கருவிகளை ஆராதனையில் உபயோகிப்பது இப்படி எல்லாமே தவறான உபதேசங்களாக உள்ளது.

## III பெந்தேகோஸ்தே சபைகளின் உபதேசங்கள்

பெந்தேகொஸ்தே பிரிவினர்கள் தங்களின் சபை பெந்தெகொஸ்தே நாளிலே ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். அது உண்மையானால் ஒரே பெந்தேகொஸ்தே சபையாக இருக்க வேண்டும். ஆனால், அப்படி இல்லாமல் பலவிதமான உபதேசங்களைக் கொண்ட, பிரிவுகளைக் கொண்ட பெந்தெகொஸ்தே சபைகளாக இருக்கின்றது! இன்று இரு நூறுக்கும் அதிகமான பெந்தேகொஸ்தே பிரிவுகளைக் கொண்ட சபைகள் காணப்படுகின்றன. இதை எழுதிக் கொண்டிருக்கும் போது ஆசீர்வாதம் என்ற பெயரில் சபையை ஆரம்பித்து அதற்கான உபதேசங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். இப்படிப் புதிய புதிய உபதேசங்களைக் கொண்ட பெந்தெகொஸ்தே பிரிவினையாளர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வேத வசனத்தை விசுவாசிப்பதை விட தரிசனத்தை விசுவாசிக்கின்றனர். ஆனால், வேத வசனம் கூறுகின்றது நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம் என்றும் (2 கொரி. 5:6), அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூறுகிறீர்கள் இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து சொல்லி முடியாததும் மகிமையாய் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும ரட்சிப்பை அடைகிறீர்கள் என்றும் தெளிவாய்க் கூறுகின்றது (1 பேதுரு 1:8,9).

மேலும், இவர்கள் சபையில் எல்லாரும் அந்நிய பாஷைகளில் பேச வேண்டும் என்று உபதேசிக்கிறார்கள். ஆனால், வேத வசனம் கூறுகின்றது சபையில் எல்லாரும் அந்நிய பாஷைகளில் பேசக்கூடாது என்றும், அப்படி பேசினால் அது பைத்தியக்காரத்தனம் என்றும் கூறுகின்றது (1 கொரி. 14:23) அந்நிய பாஷை விசுவாசிக்கு அடையாளம் என்றும் போதிக்கின்றனர். ஆனால், வேத வசனம் கூறுகின்றது அந்நிய பாஷை அவிசுவாசிக்கு அடையாளம் என்று (1 கொரி. 14:22).

மேலும், பிசாசுகளின் கிரியைகள் இன்னும் இருக்கிறது எனவே பிசாசை ஓட்ட வேண்டும் என்று உபதேசிக்கின்றனர். ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிசாசின் கிரியைகளை ஒழித்து விட்டார், அழித்து விட்டார் என்று வேதம் கூறுகின்றது (1 யோவான் 3:8). இன்னும் அற்புதங்கள், அடையாளங்கள் இருப்பதாக உபதேசிக்கின்றனர். ஆனால், வேத வசனம் கூறுகின்றது ஒழிந்து விட்டது என்று (1 கொரி. 13:8,10) ஸ்திரீகள் சபைகளில், உபதேசிக்கலாம், அதிகாரம் செலுத்தலாம் என்று உபதேசிக்கின்றனர். ஆனால், வேத வசனம் கூறுகின்றது சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள் பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை, அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும் வேதமும் அப்படியே சொல்லுகிறது. ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே (1 கொரி. 14:34,35) ஸ்திரீகள் உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ் செலுத்தவும் கூடாது (1 தீமோ. 2:11,15) என்று வேத் வசனம் கூறுகின்றது. இன்னும் அநேக காரியங்களை வேத வசனத்திற்குப் புறம்பாக உபதேசிக்கிறார்கள். எனவே, பெந்தேகொஸ்தேக்காரர்களிடமிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

**(தொடரும்)**

# BIBLE MEDITATION

## TV PROGRAM





## நாளும், நடப்பும்


1. 30வது ஒலிம்பிக் போட்டி லண்டன் மாநகரில் வண்ணமயமான கலைநிகழ்ச்சிகளுடன் நிறைவடைந்தது.
2. ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியா 2 வெள்ளி, 4 வெண்கலம் உட்பட 6 பதக்கங்களை வென்று 55வது இடத்தைப் பிடித்தது.
3. இந்த வருடம் B.E., கலந்தாய்வின் மூலம் 1 லட்சத்திற்கும் அதிகமான மாணவ, மாணவியர் பொறியியல் படிப்பில் சேர்ந்துள்ளனர்.
4. காவிரி ஆணையத்தை ஏன் கூட்டவில்லை என மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்.
5. குன்னூர் மேட்டுப்பாளையம் சாலையில் யானைகள் நடமாட்டம் அதிகரிப்பால் இரவு நேர போக்குவரத்தை தடை செய்ய அரசு ஆலோசனை.
6. சென்னையில் மட்டும் 5,000 போலி டாக்டர்கள் இருப்பதாக டாக்டர்கள் சங்க பொதுச் செயலாளர் தகவல்.
7. சூரிய ஒளியில் இயங்கும் சைக்கிள் ரிக்ஷா - திருப்பூர் இளைஞர் சாதனை.



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |





Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.

Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014




# திருமறை தியானம்


தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 10:00 | மணி |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி
இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

**கீழ்க்காணும் கைப்பிரதிகள் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.**










## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில்
## ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701,
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.